Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 5, 2022

வெள்ளிக்கிழமை ஒகஸ்ட் 05,2022 | ஒளி: 06 கதிர் 068 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

## மகாராணி வாழ்த்து



இரண்டாம் எலிசபெத் மகாராணி புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.


இலங்கை மற்றும் பிரித்தானியாவிற்கு இடையிலான நட்புறவை தொடர்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் எலிசபெத் மகாராணி குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியின் எதிர்கால செயற்பாடுகளுக்கும் வெற்றிகளுக்கும் நாட்டு மக்களின் சௌபாக்கியத்துக்கும் வாழ்த்துகளை நல்குவதாக மகாராணி குறிப்பிட்டுள்ளார்.

## அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கொஞ்சம் குறைந்தன

தலை தூக்கமுடியாத அளவுக்கு விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருட்களின் விலைகள், ஓரளவுக்கு குறைந்துள்ளன.

எரிபொருள் விலைகள் சற்று குறைந்துள்ள நிலையில், பஸ் கட்டணங்களும் சேவைகள் கட்டணங்களும் குறைந்துள்ளன. இந்நிலையிலேயே அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகளும் குறைந்துள்ளன. பருப்பு, சீனி, கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ளது என புறக்கோட்டை வர்த்தக சங்கத்தின் தொழிற்சங்க குழு உறுப்பினர் தேவபுரன் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 600 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட பருப்பு ஒரு கிலோகிராமின் மொத்த விலை 410 ரூபாயாகவும் 330 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட சீனி 270 ரூபாயாகவும் கிழங்கு 150 ரூபாயாகவும் வெள்ளைப்பூடு 420 ரூபாயாகவும் 1900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் செத்தல் மிளகாயின் மொத்த விலை 1300 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது என்றார்.



## கட்டணங்கள் குறைந்தன

பஸ் கட்டணங்கள் நேற்று (04) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



தொடர்ச்சி P2

## ஜனாதிபதியை த.மு.கூ வியாழன் சந்திக்கும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஒகஸ்ட் 11ம் திகதி தமிழ் முற்போக்கு கூட்டணியின் தூதுக்குழு, சந்தித்து மலையக தமிழ் இலங்கையர்களின் அபிலாசைகள் தொடர்பில் குறிப்பாகவும், தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பொதுவாகவும் கலந்துரையாடும் என்று கூட்டணி அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது

### சீன தூதுவரிடம் எடுத்துரைத்தார் ஜனாதிபதி ரணில்



எந்தவொரு நாடும் ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாது அமைதியான ஒத்துழைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் நாடுகளுக்கு இடையிலான மோதலின்மைக்கு இது முக்கியமான அடித்தளமாகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கான சீன தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென்ஹொங்கை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாகவும், அதன்போது ஒரே சீன கொள்கை, நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு பற்றிய ஐ.நா சாசனக் கோட்பாடுகளுக்கு இலங்கையின் நிலையான உறுதிப்பாட்டை வலியுறுத்தியதாக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## உரிமைகளை சுதந்திரமாக பயன்படுத்த அனுமதிக்கவும்

மக்களின் கருத்துச் சுதந்திரம் , அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைகளை இலங்கை அரசாங்கம் மதிக்கவும், பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும், நிறைவேற்றவும் வேண்டும். அதேபோல் மக்கள் தங்கள் மனித உரிமைகளை சுதந்திரமாகப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை கரிசனை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## சீன கப்பலுக்கு சிவப்பு கொடி எச்சரிக்கை

இந்தியாவின் பாதுகாப்பானது இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்போடு பின்னிப் பிணைந்திருப்பதால், சீன உளவுக் கப்பல் இலங்கைக்கு வருவது குறித்து பல சிவப்புக் கொடிகள் உயர்த்தப்பட்டுள்ளதாக தெற்காசிய அரசியல் கொள்கைகளுக்கான ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## விழுந்த விமானத்தை சுளியோடிகள் தேடுகின்றனர்

விமானப் படையின் ஆளில்லா விமானம் (Air Force Drone) தியவன்னா ஓயாவில் கடந்த 3ஆம் திகதி வீழ்ந்து விபத்திற்குள்ளானது.

தொடர்ச்சி P2

## மனித உரிமைகளை பலப்படுத்த கூடிய கவனம் செலுத்துங்கள்

### பிரதமரிடத்தில் பிரித்தானிய உயர் ஸ்தானிகர் வலியுறுத்து



இலங்கையில் மனித உரிமைகளை பலப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளதாகவும், அனாவசிய கைதுகள் மற்றும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P12




## கண்டனம்...

ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கோட்டை ரயில் நிலையம் முன்பாக சிவில் செயற்பாட்டாளர்கள் நேற்று (04) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



## ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் மீள் விசாரணை வேண்டும்

பா.நிரோஸ்

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட சிறந்த பொலிஸ் அதிகாரிகளைக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மீள விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## போலி QR க்கு கடுமையான சட்ட நடவடிக்கை

எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக போலியான QR குறியீட்டைப் பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். போலியான QR குறியீடுகளைப் பயன்படுத்தி எரிபொருளைப் பெற சிலர் முயற்சித்தமை போன்ற பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வேட்டையாடினால் வீதிக்கு இறங்குவோம்

பா.நிரோஸ்



போராட்டக்காரர்களின் முதுகில் ஏறி ஆட்சியைக் கைப்பற்றிய அரசாங்கம், போராட்டக்காரர்களை வேட்டையாடி வருவதாக தெரிவிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், ஜனநாயக ரீதியில் போராட்டியவர்கள் தொடர்ந்து வேட்டையாடப்பட்டால், அரசாங்கத்துக்கு எதிராக அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி வீதிக்கு இறங்குவோம் என எச்சரித்தார்.

தொடர்ச்சி P2

## கேர்னருக்கு நிபந்தனை பிணை

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சமூக செயற்பாட்டாளரான பெத்தும் கேர்னருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

தலா 10 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்ல பெத்தும் கேர்னருக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குணவெல உத்தரவிட்டார்.

அத்துடன் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் ஆஜராக வேண்டும் எனவும் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு தடை விதித்தும் சந்தேகநபருக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P12

## ஜனநாயக அரசாங்கத்துக்கு வாய்ப்புகள் அதிகம்



இலங்கையின் நெருக்கடி நிலைமையானது அடுத்தகட்டத்தில் ஜனநாயக அரசாங்கத்தை உருவாக்குவதற்கான அதிகளவான வாய்ப்பை உருவாக்கியுள்ளதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 13 மில்லியன் குரோன்களை வழங்குகிறது நோர்வே

இலங்கையில் ஏற்பட்டுள்ள உணவு மற்றும் போஷாக்கு நெருக்கடி குறித்து நோர்வே கவலை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் என்னிகன் குய்ட்ஃபெல்ட், 13மில்லியன் குரோன்களை (சுமார் ரூ. 490 மில்லியன்) இலங்கையின் ஐ.நா சபையின் மனிதாபிமான திட்டத்துக்கு வழங்குவதாக கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச் சூடு

கல்கிஸை நீதவான் நீதிமன்றத்துக்குள் வைத்து நேற்று (04) துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் பிரதிவாதி கூண்டில் ஏறியிருந்தவரை இலக்கு வைத்தே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் தப்பி சென்றுவிட்டார். எவருக்கும் எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை.

## 10 க்குள் இருக்கும் கறுப்பு ஆடுகளை கண்டுபிடியுங்கள்

பாறுக் ஷிஹான்

ஜனாதிபதியைத் தெரிவுச் செய்வதற்கான பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்களிப்பின் போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை கண்டுப்பிடியுங்கள் என வழியுறுத்தியுள்ள தமிழரசுக் கட்சி, கண்டுபிடிக்க முடியாவிடின், நீங்கள் 10 பேரும் இராஜினாமா செய்யுங்கள் எனவும் காரைதீவில் கடந்த 1 ஆம் திகதியன்று இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் கல்முனையைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் அ.அரசரெத்தினம் ஆவேசமாக கூறினார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், த. கலையரசன், தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உட்பட பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார் .

மேலும் அவர் கூறுகையில்..

ஜனாதிபதி தெரிவுக்கான வாக்களிப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூட்டத்தில் அனைவரும் அதாவது 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக டலஸ் அழகபெருமவுக்கு வாக்களிப்பது என்று நீங்கள் முடிவு எடுத்ததாக கூறுகிறீர்கள் .

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## ஜனாதிபதியை த.மு.கூ வியாழன் சந்திக்கும்

"பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான தேசிய சர்வகட்சி வேலைத்திட்டம் ஒன்றினை செயல்படுத்துதல்" தொடர்பில், ஜனாதிபதி தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு விடுத்துள்ள அழைப்பின் பேரிலேயே இந்த சந்திப்பு இடம்பெறும்.

அதேவேளை, ஒகஸ்ட் 5ம் திகதி (இன்று) ஐக்கிய மக்கள் கூட்டணியின் தூதுக்குழுவிலும் இடம்பெற்று பொதுவான தேசிய பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடுவோம் என கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

## சிவப்பு கொடி எச்சரிக்கை

எதிர்வரும் 11ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்குச் சீன ஆய்வு கப்பல் வருவது தொடர்பில் தற்போது பல்வேறு சர்ச்சைகள் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ளன. குறிப்பாக சீன கப்பலின் இலங்கை விஜயத்தை இந்தியா வன்மையாக எதிர்த்து வருவதுடன், அதனை நிறுத்த இராஜதந்திர ரீதியில் முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

எனினும் ஹம்பாந்தோட்டைக்கு வரும் சீனக் கப்பலானது எரிபொருள் நிரப்புவதற்காக வருகிறதாகவும், வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்ல என்றும் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன கூறியுள்ளதுடன், பிரதமர் தினேஷ் குணவர்தனவும் இந்த சர்ச்சையை நட்பு ரீதியில் கையாளலாம் என தெரிவித்திருந்தார். இந்நிலையில் தற்போது தெற்காசிய அரசியல் கொள்கைகளுக்கான ஆய்வு நிறுவனம் இது குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் இவ்வாறான பதிவொன்றை இட்டுள்ளது. அதில் இந்தியப் பெருங்கடல் மற்றொரு மோதல் புள்ளியாக மாறுகிறதா, அங்கு இந்தியாவின் ஆதிக்கத்தை அதன் சொந்த கொல்லைப்புறமே சவால் விடுகிறதா? என்ற பதிவையும் இட்டுள்ளது.

## போலி QR க்கு கடும் சட்ட நடவடிக்கை

அத்தகைய QR குறியீடுகளை அடையாளம் காண தகவல் தொழில்நுட்ப முகவமைப்புடன் இணைந்து விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். அத்துடன் தற்போது அறிமுகப்படுத்தப்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான QR முறைமை பற்றியும், எரிபொருள் விநியோகம் தொடர்பில் QR அமைப்பு கொண்ட நிலையங்கள் தொடர்புடைய பிரச்சினைகள், அதற்கான பொறிமுறையை மேம்படுத்துதல், இயந்திரங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கான எரிபொருள் தேவைகள் குறித்தும் கூடிய கவனம் செலுத்துவதாகவும், அது குறித்து உரிய தரப்புடன் தொடர்ச்சியாக கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## வேட்டையாடினால் வீதிக்கு இறங்குவோம்

எதிர்க்கட்சிகளின் ஒன்றியத்தால் நேற்று (04) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். புதிய அரசாங்கம் தொடர்ச்சியாக அடக்குமுறையை பிரயோகிக்கிறது. மக்கள் எழுச்சிப் போராட்டங்களால் ஏற்பட்ட மாற்றத்திலேயே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. போராட்டக்காரர்களின் முதுகில் ஏறி ஆட்சிக்கு வந்துவிட்டு, அவர்களை வேட்டையாடுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று முன்தினம் (03) கைது செய்யப்பட்டுள்ளார். ஜனநாயக ரீதியாகப் போராட்டங்களை முன்னெடுக்கும் ஜோசப் ஸ்டாலின் முன்னிலை தொழிற்சங்க தலைவர். அவரைக் கைது செய்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதேபோல் போராட்டத்தில் ஈடுபட்ட பலரையும் அரசாங்கம் கைது செய்துள்ளது. அவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் உள்ள மக்களின் கவனத்தை வேறு திசைக்கு திருப்புவதற்கே போராட்டக்காரர்களை அரசாங்கம் தொடர்ந்துக் கைது செய்து வருகிறது. இந்நிலைமை தொடருமாக இருந்தால், அரசாங்கத்துக்கு எதிராக நாமும் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு வீதிக்கு இறங்குவோம் எனவும் தெரிவித்தார்.

# உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது

மேலும், தற்போதைய உலகளாவிய பதட்டங்களை மேலும் அதிகரிக்கும், ஆத்திரமூட்டல்களை நாடுகள் தவிர்க்க வேண்டும். பரஸ்பர மரியாதை மற்றும் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாதது அமைதியான ஒத்துழைப்பு மற்றும் மோதலின்மைக்கு முக்கியமான அடித்தளமாகும் என்பதையும் அவர் வலியுறுத்தியதாக தனது ட்விட்டர் பக்கத்தில் ஜனாதிபதி பதிவிட்டுள்ளார்.

## மனித உரிமைகளை பலப்படுத்த கூடிய கவனம் செலுத்துங்கள்

பிரதமர் தினேஷ் குணவர்தனவை நேற்று (4) இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். தினேஷ் குணவர்தன பிரதமராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதுடன், அடுத்தமாதம் கூடவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் தொடர்பிலும், அதில் இலங்கையின் முன் நகர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலை திருப்திகரமானதாக இல்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள உயர் ஸ்தானிகர், மனித உரிமைகளை பலப்படுத்துவத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டியுள்ளதாகவும், அனாவசிய கைதுகள் மற்றும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். மேலும் அரசியலமைப்பு உருவாக்கம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கான வாய்ப்புகள், கல்வி, கலாச்சாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய துறைகளில் இலங்கைக்கு பிரித்தானியாவின் ஒத்துழைப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

## விழுந்த விமானத்தை சுழியோடிகள் தேடுகின்றனர்

பாராளுமன்றத்தின் புதிய அமர்வு ஆரம்பிக்கப்பட்டபோது பாதுகாப்புக்கான பயன்படுத்தப்பட்ட விமானமே தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விபத்துக்கு உள்ளானது என விமானப்படை ஊடகப்பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

விமானத்தை கண்டுபிடிப்பதற்காக கடற்படையின் சுழியோடிகள் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமானப்படை பேச்சாளர் தெரிவித்தார்.

## மீள் விசாரணை வேண்டும்

எதிர்க்கட்சிகளின் ஒன்றியத்தால் நேற்று (04) நடாத்தப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதியின் அக்கிராசன உரையில் எமக்கு எந்தவிதமான விமர்சனங்களும் இல்லை. அதில் பல நல்ல விடயங்கள் உள்ளன. அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை குற்றவாளியாகக் குறிப்பிடும் பல குற்றச்சாட்டுகளில் ஈஸ்டர் தாக்குதல் சம்பவமும் இருக்கிறது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பல விடயங்கள் அம்பலமாகியிருக்கிறன. பலர் மீது குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. ஷானி அபேசேகர உள்ளிட்ட பல நல்ல பொலிஸ் அதிகாரிகள் மீதும் போலியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்த நிலையில், நீதிமன்றமே அவர்களை விடுவித்துள்ளது என்றார்.

இவ்வாறான நிலையில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மீள் விசாரணைகளை மேற்கொள்ள ஷானி அபேசேகர உள்ளிட்ட அதிகாரிகளை மீள நியமித்து ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ள சதி என்ன? சூத்திரதாரிகள் யார் என்பதை ரணில் கண்டறிவாரா எனவும் கேள்வி எழுப்பினார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஸ்கொட்லாந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இங்குள்ள பொலிஸாரே போதும். ஆனால் தேசபந்து தென்னகோன் போன்ற கடந்த அரசாங்கத்தின் கூலிப் படையினரைக் கொண்டு விசாரணைகளை மேற்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

> ரணில் தயாரா என்பதை ரணில் தனது செய்கையின் ஊடாக நிரூபிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறோம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஒரு பணயக் கைதிபோல வைத்துக்கொண்டு தங்களுடைய போலியான பிரசாரங்கள் ஊடாக தங்களது அரசியலை மீள உயிர்ப்பித்துக்கொள்ள முயற்சிக்கும் குழுவிடமிருந்து பிடியிலிருந்து விடுபடுவதற்கு ரணில் தயாரா என்பதை ரணில் தனது செய்கையின் ஊடாக நிரூபிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

## கேர்னருக்கு நிபந்தனை பிணை

பாராளுமன்றத்திற்கு பிரவேசிக்கும் பொல்துவ சந்தியில் கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி இடம்பெற்ற அமைதியின்மை தொடர்பில் சமூக செயற்பாட்டாளரான பெத்தும் கேர்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

## ஜனநாயக அரசாங்கத்துக்கு வாய்ப்புகள் அதிகம்

இலங்கையின் நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து க்கொண்டுள்ளோம். ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வீதியில் இறங்கி இலங்கையின் ஸ்திரத்தன்மையை வலியுறுத்தி போராடிக்கொண்டுள்ளனர். அதேபோல் வெளிப்படை தன்மை மற்றும் மக்களின் வாழ்வுரிமை குறித்து வலியுறுத்தி க்கொண்டுள்ளனர். தற்போது இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கின்றோம். புதிய அரசாங்கம் ஒன்று உருவாகியுள்ளது.

இலங்கை தற்போது நெருக்கடியான தருணத்தில் உள்ளது. ஆனால் இலங்கையில் ஜனநாயக தன்மை மிக்கதும், அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கான அதிகளவு வாய்ப்புள்ளது எனவும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

## கட்டணங்கள் குறைந்தன

ஒரு லீற்றர் டீசலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டதன் பயனை பயணிகளுக்கு வழங்கும் வகையில், பஸ் கட்டணம் குறைக்கப்படுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிராண்டா குறிப்பிட்டார்.

பஸ் கட்டணம் 11.14 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. தற்போது ஆகக் குறைந்த கட்டணமான 38 ரூபாய் 34 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

## உரிமைகளை சுதந்திரமாக...

பொது இடங்களில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான மக்களின் உரிமையை அதிகாரிகள் மதிக்க வேண்டும். அதேபோல் அமைதியான எதிர்ப்பாளர்களைக் கலைப்பதற்கு மிரட்டல் அல்லது பலத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசிய பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றவியல் தவறுக்கான போதுமான சான்றுகள் இருக்குமானால், சர்வதேச உரிய செயல்முறை மற்றும் நியாயமான விசாரணைத் தரங்களுக்கு இணங்க, ஒவ்வொரு வழக்கின் அடிப்படையில் மதிப்பீட்டிற்குப் பிறகு குற்றத்தின் தன்மைக்கு ஏற்றவாறு அடையாளம் காணக்கூடிய குற்றத்தை உடனடியாக விதிக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், இலங்கை அரசாங்கம் கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைகளை மதிக்கவும், பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும், நிறைவேற்றவும் வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## 13 மில்லியன் குரோன்களை வழங்குகிறது நோர்வே

இலங்கையில் ஏற்பட்டுள்ள உணவு மற்றும் ஊட்டச்சத்து நெருக்கடி கடுமையான மனிதாபிமான சூழ்நிலை பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. விரைவான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் வரும் மாதங்களில் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களை இலக்காகக் கொண்ட உலக உணவுத் திட்டத்திற்கு 5மில்லியன் குரோன்களையும், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்துக்கும் சனத்தொகை அமைப்புக்கும் 8மில்லியன் குரோன்களையும் நோர்வே வழங்குவதாக தெரிவித்துள்ளார். இதேவேளை, பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை எதிர்த்துப் போராடுவதற்கும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கும் நோர்வே முன்னுரிமை அளிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 10 க்குள் இருக்கும் கறுப்பு ஆடுகளை கண்டுபிடியுங்கள்

ஆனால், தேர்தலுக்கு பின்னர் ஒருசிலர் ரணிலுக்கு வாக்களித்ததாக தகவல்கள் வந்திருக்கின்றன. உடனடியாக அவர்களை கண்டுபிடிக்க வேண்டும். ஏனெனில் இது தொடர்ந்தால் எதிர்காலத்தில் ரகசியமாக எந்தவிதமான தீர்மானமும் எடுக்க முடியாமல் போய்விடும் என்றார்.

இந்திய அரசாங்கம் சொல்லி ரணிலுக்கு வாக்களித்தது என்று யாராவது சொன்னால் நீங்கள் டலஸ் அழகபெருமவுடன் செய்த ஒப்பந்தம் பிரயோசனமில்லை.

டலஸ் அழகபெருமவுக்கு வாக்களிப்பதற்கு எடுத்த முடிவு, கட்சியின் முடிவா? அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் முடிவா? ஏனென்றால் 75 வருட ஜனநாயக அரசியல் ஈடுபட்ட தமிழரசு கட்சி இப்படியான ஒரு தவறான முடிவை எடுத்திருக்கின்றது. அது கட்சியை அவமானத்துக்கு உட்படுத்தி இருக்கிறது என்று தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அறிக்கை வெளியிட்டார்.

அப்படியானால் இந்த முடிவு எடுக்கப்பட்டதா? தெரியாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டதா? தெரியப்படுத்தினால் நன்றாக இருக்கும். என்றார்.

பதிலளித்த சுமந்திரன்

இக்கேள்விகளுக்கு பதிலளித்த எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, ஜனாதிபதி தெரிவு தொடர்பாக தமிழரசுக் கட்சி மட்டத்திலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்திலும் பல்வேறு கூட்டங்களை நடத்தினோம். தமிழரசு கட்சி கூட்டங்களுக்கு எல்லாம் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு அழைப்பு கொடுத்தோம். ஆனால் எரிபொருள் பிரச்சனை காரணமாக மற்றும் நிகழ்நிலையில் இணைந்து கொள்ள முடியாமை காரணமாகவும் அவரது பங்குபற்றுதல் இல்லாமல் இருந்தது. ஆனால், அனைத்து தீர்மானங்களும் அவருக்கு கூறப்பட்டு வந்தது என்றார்.

அடுத்தது எமது பாராளுமன்ற உறுப்பினர் 10 பேரில் ஆறு பேர் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மீதி நான்கு பேர் பங்காளி கட்சி உறுப்பினர்கள். அனைவரும் ஏகமனதாக இணைந்து டலஸ் அழகபெருமவுக்கு வாக்களிப்பதாக முடிவு எடுத்தோம். அதன்படியே செயல்பட்டோம். யாராவது மாறி வாக்களித்து இருக்கிறார்கள் என்று நான் கருதவில்லை என்றார்.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் (03) சந்தித்தது. அப்போது, உங்களில் சிலரும் எனக்கு வாக்களித்தனர் என ஜனாதிபதி ரணில், கூட்டமைப்பினரிடம் தெரிவித்துவிட்டார். அதனை, சுமந்திரனும், சித்தார்த்தனும் மறுத்தும் இருந்தனர்.

## பொதுசொத்துக்களை கொளுத்துவதா அமைதியான போராட்டம்?



பா.நிரோஸ்

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து அதனை நாசம் செய்வதுவும், ஜனாதிபதி செயலகத்தின் இரும்பு வேலிகளை உடைத்து எடுத்துச் செல்வதும், பிரதமரின் வீடு உள்ளிட்ட 70க்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளைக் கொளுத்துவதா அமைதியான போராட்டம் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலியிடம் ஆளுங்கட்சி எம்.பி ரோஹித அபேகுணவர்தன கேள்வி எழுப்புகின்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த ஆளுங்கட்சி எம்.பி ரோஹித அபேகுணவர்தனவே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரையில் பல முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாக ரணில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அமைதியான போராட்டத்தில் ஈடுபடுபவர்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். அரசாங்கத்தை, ஜனாதிபதியை, பிரதமரை விமர்சிக்கும் உரிமை அனைவருக்கும் உள்ளது. இதனையே ஜனாதிபதி கூறியுள்ளதோடு, பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு நாட்டில் இடமில்லை எனவும் கூறியுள்ளார் என்றார்.

ஜனநாயக ரீதியாக ஆட்சியை கவிழ்ப்பதற்குப் பதிலாக வன்முறையில் எவராவது இறங்குவார்களாக இருந்தால் அது தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு சமமானது எனவும் தெரிவித்தார்.








# கண்டன ஆர்ப்பாட்டம்...




ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் நேற்று (04) ஈடுபட்டிருந்தன.



## 'செஸ் அரசியல்' விளையாடாது நேர்மையாக செயற்பட வேண்டும்

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியல் செஸ் விளையாடிக்கொண்டிருக்காது, நேர்மையாகச் செயற்பட வேண்டுமென சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஜனாதிபதி கோட்டாபய குடும்பக் கைதியாக்கப்பட்டார். கோட்டாவுக்கு திருட வேண்டும் என்ற நோக்கம் கிடையாது. தன்னை ஜனாதிபதியாக்கிய எவரது பேச்சுகளையும் கோட்டா கேட்கவில்லை. குடும்பத்தினரதும் பி.பி.ஜயசுந்தர உள்ளிட்டோரது பேச்சுகளையுமே அவர் கேட்டார்.

இதுபோன்ற காரணங்களாலேயே கோட்டாவால் பதவி விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. எவ்வாறாயினும் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். ரணில் தொடர்ந்து அரசியலை செஸ்ஸாக விளையாடிக்கொண்டிருக்க முடியாது. அவர் நேர்மையானவராக செயற்பட வேண்டும். 21ஆவது திருத்தச் சட்டத்தை நேர்மையாக கொண்டு வருவார் என நம்புகிறோம் என்றார்.

## ஜோசப் ஸ்டாலின் தண்டிக்கப்படக்கூடாது

மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளருமான ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் மேரி லோவர் தனது கண்டனங்களை தெரிவித்துள்ளார்.

பிரபல மனித உரிமைப் பாதுகாவலர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டதாக இலங்கையில் இருந்து கிடைக்கும் செய்திகளை கேட்டு கவலையடைகின்றேன். ஜோசப் போன்ற மனித உரிமைப் பாதுகாவலர்களின் பணி சமீபத்திய வாரங்களில் முன்னெப்போதையும் விட முக்கியமானதாக அமைந்துள்ளது. ஆகவே அதனை ஆதரிக்க வேண்டும்; தண்டிக்கப்படக்கூடாது என்றார்.



## அநுரவை சந்தித்தார் நியூ, உயர்ஸ்தானிகர்

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அபிள்டனுக்கும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (04) பிற்பகல் ஜே.வி.பி தலைமை அலுவலகத்தில் நடந்தது.இந்தச் சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மற்றும் பிரதி உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ டிராவலர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்தும் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

### வெளிநாட்டு கையிருப்பில் இருந்து 7 பில்லியன் டொலர் குறைந்ததை

# எவரும் தேடிப் பார்க்கவில்லை

### ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர, உயர்நீதிமன்றில் சுட்டிக்காட்டு

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பில் 7 பில்லியன் டொலர் இரு வருடங்களுக்குள் திடீரென குறைவடைந்தன. அது தொடர்பில் எவரும் தேடிப்பார்க்கவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர உயர்நீதிமன்றில் நேற்று முன்தினம் ( 3) சுட்டிக்காட்டினார்.

நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்திற்கும், சீரற்ற நிதி நிர்வாகத்துக்கும் காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போது அவர் இவ்வாதங்களை முன்வைத்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான நீதியரசர்களான புவனேக அலுவிஹார, விஜித் மலல்கொட, எல்.ரி.பி. தெஹிதெனிய, முர்து பெர்ணான்டோ ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் குறித்த மனுக்கள் நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இரசாயன உரப் பாவனையை தடை செய்தமை, சேதனப் பசளை பயன்பாட்டை ஊக்குவிக்கும் வேலைத் திட்டங்களை நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பத்தில் அமல் செய்ய எத்தனித்தமை, எந்த வகையிலும் அடிப்படையற்ற வெறுமனே அரசியல் கொள்கை சார் தீர்மானங்களாகும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இரு வருடங்களுக்குள், நாட்டின் வெளிநாட்டு கையிருப்பில் 7 பில்லியன் டொலர் குறைந்துள்ளதாகவும், இது 690 சதவீத குறைவு எனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர, நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு திடீரென குறைந்தது



எப்படி என கேள்வி எழுப்பினார். அது தொடர்பில் எவரும் தேடிப் பார்க்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார் .தவறான நிதிப் பயன்பாடு, கடன் மறுசீரமைப்புக்கு செல்லாமை, சர்வதேச நாணய நிதியத்தை நாடாமை போன்ற பிரதிவாதிகளின் பொறுப்பற்ற, தான்தோன்றித்தனமான தீர்மானங்கள் காரணமாக நாடு வங்கரோத்து நிலையை அடைந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி அத்துலசிறி குமார சமரகோன், புத்திஜீவிகளான சூசையப்பு நேவிஸ் மொறாயஸ், கலாநிதி மஹிம் மென்டிஸ் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதமராகவிருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், டபிள்யூ. டி.லக்ஷ்மன், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ். ஆர்.ஆட்டிகல உள்ளிட்ட 39 பேரை பிரதிவாதிகளாகப் பெயரிட்டிருந்தனர்.

தற்போது ரணில் விக்கிரமசிங்க பிரதிவாதி பட்டியலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதிவாதி பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வரிக்குறைப்புகளே நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைக்குப் பிரதான காரணமென மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக மக்களால் செலுத்தப்படும் வரிகளைக் குறைப்பதற்குத் தன்னிச்சையான தீர்மானத்தை மேற்கொண்டார் என்றும், இத்தீர்மானம் முற்றுமுழுதாக அரசியல் ரீதியான நகர்வென்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



## விமானப்படையின் மீட்புக் குழு தயார்

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதன் காரணமாக ஏற்படக்கூடிய பாதகமான வானிலையால் நாட்டின் பல மாகாணங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் ஏற்படக்கூடும் என அனர்த்த முகாமைத்துவ அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

இதன் காரணமாக ஏற்படக்கூடிய அவசர அனர்த்தங்களை எதிர்கொள்ளும் வகையில் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் ஆலோசனைக்கு அமைய விமானங்கள் மற்றும் மீட்பு குழுவினர் தயார் நிலையில் உள்ளனர் என விமானப்படை தெரிவித்துள்ளது.

அனர்த்த நிலைகளை கண்காணிக்க கண்காணிப்பு விமானமும் அனர்த்த பகுதிகளுக்கான நிவாரணங்கள் மற்றும் மீட்பு பணிகளுக்காக விமானப்படை ஹெலிகொப்டர்களும் விசேட மீட்பு பயிற்சிகள் மேற்கொண்ட விமானப்படை ரெஜிமென்ட் விசேட படைப்பிரிவும் ரத்மலான , கட்டுநாயக்க மற்றும் ஹிங்குரகோட ஆகிய விமானப்படை தளங்களில் தயார் நிலையில் அமர்த்தப்பட்டுள்ளதாக விமானப்படை தெரிவித்துள்ளது.



## அந்த ஒருவரை தேடும் பொலிஸார்

கொழும்பு, பெரேரா மாவத்தையில் மே.10ஆம் திகதியன்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீது தாக்குதல் நடத்தியவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

அவரை கண்டுப்பிடித்தால், 071-8591735, 071-8592735 071-8591733 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனார்.


## அறிவித்தல்

**SENKADAGALA FINANCE PLC (PB238PQ)**

53 வது வருடாந்த பொதுக் கூட்டம்

**SENKADAGALA FINANCE PLC (PB238PQ)** இன் ("கம்பெனி") ஐம்பத்து மூன்றாவது (53 வது) வருடாந்த பொதுக் கூட்டம் **(AGM) 2022** ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை அன்று முற்பகல் **10.00** மணிக்கு நிகர்நிலைத் தளத்தில் நடைபெறவுள்ளது என்பதை இதன்மூலம் அறிவிக்கிறோம். 2022 ஜூன் மாதம் 28 ஆம் திகதி அன்று திட்டமிடப்பட்ட வணிகத்தை மேற்கொள்வதற்கான கூட்டத்தின் அறிவிப்பின்படி.

பொதுக்கூட்டம் தொடர்பான விவரங்கள் நிகழ்ச்சி நிரல் அத்துடன் பதிலாளுக்கானதும் மற்றும் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட ப்ராக்ஸி படிவம் மற்றும் விண்ணப்பப் படிவத்தினை, கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளமான **(https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=SFCL.N0000)** மற்றும் நிறுவனத்தின் இணையத்தளமான **(https://www.senfin.com/ )** இல் பார்க்கவும்.

பங்குபற்றவிரும்பும் பங்குளளளளதாரர்கள் தயவு செய்து தாமதமின்றி மேற்குறித்த இணையத்தளங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து **info@senfin.com** அல்லது **corporateservices@corporateservices.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கூட்டம் ஆரம்பமாகும் குறித்த நேரத்துக்கு 48 மணித்தியாளங்களுக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**SENKADAGALA FINANCE PLC** யின் இயக்குநர் சபையின் அறிவுறுத்தளின் பிரகாரம்
கோர்ப்பரேட் சேர்வீசஸ் (பிரைவட்) லிமிட்டட்
செயலாளர்கள்

## அறிவித்தல்

**HSENID BUSINESS SOLUTIONS PLC (PQ 00245385)**

**வருடாந்த பொதுக் கூட்டம்**

HSENID BUSINESS SOLUTIONS PLC (PQ 00245385) இன் ("கம்பெனி") வருடாந்த பொதுக் கூட்டம் (AGM) 2022 ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று பிற்பகல் 2.00 மணிக்கு இலங்கை வர்த்தக சம்மேளனம், இல. 50, நவம் மாவத்தை, கொழும்பு 02, இல் நடைபெறும் என்பதை இதன்மூலம் அறிவிக்கிறோம். 2022 ஜூலை மாதம் 27 ஆம் திகதி அன்று திட்டமிடப்பட்ட வணிகத்தை மேற்கொள்வதற்கான கூட்டத்தின் அறிவிப்பின்படி.

கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல், பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட ப்ராக்ஸி படிவம் மற்றும் சுற்றறிக்கை பற்றிய விரிவான அறிவிப்புக்கு, கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளமான (**https://www.cse.lk**) மற்றும் நிறுவனத்தின் இணையதளமான (**https://hsenidbiz.com**) இல் பார்க்கவும்.

மேலும் 2022 மே மாதம் 27 ஆம் திகதி சுற்றறிக்கை எண். 2022 இன் 4, கொழும்பு பங்குச் சந்தையால் வெளியிடப்பட்டது. ஆண்டு அறிக்கைகளின் அச்சிடப்பட்ட பிரதிகள் இந்த ஆண்டு வழங்கப்பட மாட்டாது. மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள திருமதி. திமுத் மதுவந்தியை அலுவலக நேரத்தில் 0114621111 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**HSENID BUSINESS SOLUTIONS PLC யின் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**கோர்ப்பரேட் சேர்வீசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**செயலாளர்கள் / பதிவாளர்கள்**
**2022 ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி அன்று**

கல்முனையில் மாட்டிறைச்சிக்கு

# கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகராட்சி ஆள்புல எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சியின் அதிகூடிய விலையாக 1,600 ரூபாயாக கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, கல்முனை மாநகர பிரதேசங்களில் ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சி 2,200 ரூபாய்க்கு மேல் விற்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய மேற்படி கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை (06) தொடக்கம் அமலுக்கு வரும் வகையில், இந்த நிர்ணய விலையை நடைமுறைப்படுத்த மாநகர மேயர் ஏ.எம்.றகீப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி விற்பனையாளர்கள்,



நேற்று முன்தினம் (03) மாலை, மாநகர மேயரால் மாநகர சபைக்கு நேரடியாக அழைக்கப்பட்டு, இறைச்சி வியாபாரத்தின்போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் செலவீனங்கள் குறித்து கேட்டறியப்பட்டு, அவற்றுக்குரிய தீர்வுகள் முன்மொழியப்பட்ட நிலையில், அவர்களது இணக்கத்துடன் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சி 1,600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அதில் ஆகக்கூடியது 200 கிராம் மாத்திரமே முள் அடங்கியிருத்தல் வேண்டும் எனவும் அனைத்து இறைச்சிக் கடைகளிலும் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறும் மாட்டிறைச்சி வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், மாட்டிறைச்சிக் கடைக்கான வியாபார உரிமம் இரத்துச் செய்யப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, இறைச்சிக் கடைக்காரர்களுக்கு மாடுகளை விற்பனை செய்வோர் மாநகர சபையில் தம்மைப் பதிவு செய்து, அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஒரு கிலோ கிராம் இறைச்சியை ஆகக்கூடியது 1,300 ரூபாய்க்கு வழங்க வேண்டும் எனவும் மேயரால் உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

இதனை மீறும் மாடு வியாபாரிகள் பொலிஸார் மூலம் கைது செய்யப்பட்டு, கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன், மாடுகளும் பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் என்றால்

# அடங்கி இருக்கவும்

## துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல்

வி.நிதர்ஷன்

“தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் என்றால் அடங்கி இருக்க வேண்டும்” என்று கூறி, சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் தனபாலசிங்கம் சுதர்சனின் கழுத்தில் கைத்துப்பாக்கியை வைத்து பொலிஸ் அதிகாரி ஒருவர் அச்சுறுத்தியுள்ளார்.

கைதடி பல நோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (03) இரவு பெட்ரோல் நிரப்புவதற்காக சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் தனபாலசிங்கம் சுதர்சன் வரிசையில் நின்றுள்ளார்.

அங்கு சீருடையில் நின்ற PC இலக்கம் 76053 உடைய



பொலிஸ் உத்தியோகத்தர், தனது கைத்துப்பாக்கியை எடுத்து, முன்னாள் நகரசபை உறுப்பினரின் கழுத்தில் வைத்து அச்சுறுத்தியதோடு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் என்றால் அடங்கி இருக்க வேண்டும் என்று கூறி எச்சரித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த நிரப்பு நிலையத்தில் மக்கள் நீண்ட வரிசையில் நின்ற போது, அங்கு கடமையில் இருந்த பிரதேச செயலக உத்தியோகத்தர், தமக்குத் தெரிந்தவர்களை வரிசையில் நிற்கவிடாமல், பெட்ரோல் நிரப்ப அனுமதித்துள்ளார்.

இதனை அவதானித்த முன்னாள் நகரச பை உறுப்பினர், அப்படி செய்ய வேண்டாம் எனத் தெரிவித்துள்ளார்.

இதனால் முன்னாள் நகர சபை உறுப்பினரோடு முரண்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தரும் பொலிஸாரும் ஒரு கட்டத்தில் எல்லை மீறியதில், மேற்படி பொலிஸ் அதிகாரி, தனது கைத்துப்பாக்கியை எடுத்து சுதர்சனின் கழுத்தில் வைத்து அச்சுறுத்தியுள்ளார்.

இதனால் அங்கு நின்றவர்கள் அச்சமடைந்ததோடு, பலர் எரிபொருள் நிரப்பாமல் திரும்பிச் சென்றதையும் காணமுடிந்தது. இந்த அச்சுறுத்தல் சம்பவம் அங்குள்ள சி.சி.டி.வி கமெராவில் பதிவாகியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## வல்லை விபத்து; ஒருவர் படுகாயம்

வி.நிதர்ஷன்

அச்சுவேலி, வல்லைப் பகுதியில் நேற்று (04) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவரை, கோப்பாயிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கார் மோதித் தள்ளியது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் குதிக்கால் அறுந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

வல்லைப் பாலத்துக்கு மேலே மழை காரணமாக ஏற்பட்ட வழுக்கு நிலையால் எதிரே வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது.

மோதிய கார் எதிரே



உள்ள பாலத்துக்குள் விழுந்து முழுதாக சேதம் அடைந்தது. இருப்பினும், காரில் பயணித்த சாரதி உயிர் தப்பினர்.

விபத்தில் காயமடைந்தவரின் மோட்டார் சைக்கிளும் முற்றாக சேதமடைந்ததுடன், பாலத்தில் தூக்கி வீசப்பட்டமையால் அவரது குதிக்கால் பாலத்துடன் செருகி அறுந்ததாக தெரியவருகின்றது.

இந்த விபத்து தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



நீண்ட நாள்களுக்குப் பின்

## இரவு நேர ரயில் சேவை

எஸ். தில்லைநாதன்

காங்கேசன்துறை - கல்கிசை இடையே நீண்ட நாள்களுக்குப் பின் இரவு நேர ரயில் சேவையை ஆரம்பிக்க ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் 10ஆம் திகதி கொழும்பிலிருந்து ஆரம்பிக்கப்படும் இந்தச் சேவை ஒகஸ்ட் 11ஆம் திகதி இரவு காங்கேசன்துறையிலிருந்து மீள கொழும்புக்கு செல்லும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னதாக இரவு நேர தபால் சாதாரண ரயில் சேவையாக நடத்தப்பட்ட இந்தச் சேவையை, குளிரூட்டப்பட்ட பெட்டிகளை இணைத்து வடக்குக்கான புதிய சேவையாக ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இ.போ.ச

## மட்டு. சாலைக்கு புதிய முகாமையாளர்

ரி.எல்.ஜவ்பர்கான்



இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்புச் சாலை முகாமையாளராக கந்தசாமி சிறிதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

2015 முதல் 2020 வரையான காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்புச்சாலை பிரதி முகாமையாளராகவும் பின்னர் பதவியுயர்வு பெற்று, இலங்கை போக்குவரத்துச் சபையின் கிழக்கு பிராந்திய நிர்வாக உத்தியோகத்தராகவும் பதவி வகித்து வந்த நிலையிலேயே, இவருக்கு மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கந்தசாமி சிறிதரன், தனது கடமையை நேற்று முன்தினம் (04) பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

சுவர் விழுந்து

## மூன்றரை வயது சிறுமி மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்

சுவர் விழுந்து மூன்றரை வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்தானை அணைக்கட்டு பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (03) இடம்பெற்றுள்ளது.

பழைய சுவர் ஒன்றுக்கு அருகில் சிறுமிகள் சிலர் விளையாடிக் கொண்டிருந்த போது, பலத்த காற்று வீசியதால் சுவர் விழுந்ததில் உசனார் பாத்திமா றீமா எனும் சிறுமியே இவ்வாறு




உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் சடலம், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, மருத்துவ பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

எப்.முபாரக்

திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல்துறை பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (03) இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான எம்.நஸார் (60 வயது) எனவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து கட்டுத்துவக்குடன் சென்ற போது, குறித்த துவக்கு தானாகவே வெடித்தமையால் காலில் காயம் ஏற்பட்ட நிலையில் அதிக இரத்தப்போக்குக் காரணமாக இவர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

குடும்பஸ்தரின் சடலம், திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இம் மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சீனக்குடா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## கொவிட் தடுப்பூசியை விரைந்து பெறுங்கள்

எம்.எஸ்.எம். ஹனீபா

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இது வரை கொவிட்-19 தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், நேற்று (04) தெரிவித்தார்.

தற்போது நாட்டில் கொவிட்-19 வைரஸ் தொற்று மீண்டும் காணப்படுவதால், சுகாதார வைத்தியாதிகாரி அலுவலகங்களுக்குச் சென்று தங்களுக்கான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார். முதலாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள், இரண்டாவது தடுப்பூசியையும், இரண்டாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் மற்றும் மூன்றாவது தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்களை தொடர்புகொண்டு இத் தடுப்பூசிகளை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகங்களில் ஏற்றிக்கொள்ளுமாறு தெரிவித்தார்.



மக்கள் கனிசமாக ஒன்று கூடுவது, முகக்கவசம் அணியாமல், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் கவனயீனமாக நடந்து கொண்டால் எதிர்காலத்தில் பாரிய பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

ஆகவே, இவற்றை கருத்திற்கொண்டு மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையால்

## வடக்கில் விசேட நடமாடும் சேவை

என்.ராஜ்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண காரியாலயத்தின் ஏற்பாட்டில், பொதுமக்களுக்கான நடமாடும் சேவையை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண பிரதிப் பணிப்பாளர் திருமதி கவிதா ஜீவகன் தெரிவித்தார்.

வட பகுதியில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்வைப் பெற்று கொடுப்பதற்காக இந்த நடமாடும் சேவையை இரண்டு கட்டங்களாக நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதாக எதிர்வரும் 9ஆம் திகதியன்று, நகர விருத்தி அதிகார சபையின் வட மாகாண காரியாலயத்தின் முதலாம் மாடியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக,



வவுனியா மாவட்டம் மற்றும் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக வவுனியா கலாசார மண்டபத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு நடமாடும் சேவைகளையும் காலை 8:30 மணி தொடக்கம் பிற்பகல் 2:30 மணி வரை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த நடமாடும் சேவையில் கட்டட கட்டுமானம், காணி தொடர்பான பிரச்சினைகள், அங்கிகாரமற்ற கட்டடங்கள் மற்றும் வேறு கட்டட அனுமதிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

யாழில் வர்த்தகர்கள்

## மூவருக்கு அபராதம்

எம்.றொசாந்த்

யாழில் அரிசிக்கான நிர்ணய விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த இரு வர்த்தகர்களும், சமையல் எரிவாயு சிலிண்டரை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவரும் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புகொண்டமையை அடுத்து, மூவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய, வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனைகளை நடத்தினர்.

இதன்போது, அரிசியை நிர்ணய விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த இரு வர்த்தகர்கள் மற்றும் எரிவாயு சிலிண்டரை பாவனையாளருக்கு வழங்காது பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் என மூவருக்கு எதிராக தனித் தனியாக நீதிமன்றில் வழங்குத் தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கு விசாரணைகளின் போது, வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து, மூவருக்கும் நீதிமன்று தலா ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் சேவைகள் தொடர்பான

# முறைப்பாடுகளுக்கு விசேட கருமபீடம்

அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபையின் சேவைகள் தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்களிடமிருந்து உடனுக்குடன் பெற்றுக் கொள்வதற்காக அழைப்பு நிலையம் (Call Centre) எனும் விசேட கருமபீடம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் பழைய கட்டடத் தொகுதியில் நிறுவப்பட்டுள்ள இந்நிலையத்தில், பொது மக்கள் தமது முறைப்பாடுகளை அலுவலக நேரத்தில் 0672030000 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது நேரடியாக வருகைதந்து, வாய்மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ தெரிவிக்க முடியும் என மாநகர மேயர் சி ஏ.எம்.றகீப், நேற்று (04) தெரிவித்தார்.

# ஸ்டாலின் கைதுக்கு எதிராக போராட்டம்

க. அகரன்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினின் கைதுக்கு எதிராக வவுனியாவில் ஆசிரியர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டம், வடக்கின் பெரும்பாலான பாடசாலைகளில் நேற்று (04) காலை 10 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்துத் தெரிவித்த போது, “ஜனநாயக ரீதியாக உரிமைக்காக போராடிய எமது பொதுச் செயலாளர், முறையற்ற விதத்திலே கைது செய்யப்பட்டுள்ளார். அதற்கு எமது வன்மையான கண்டனங்களை




தெரிவித்துக்கொள்வதுடன், அவர் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றோம்.

“அத்துடன், இந்த அரசு அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்கி, நாட்டில் ஜனநாயகத் தன்மையை உறுதி



செய்யவேண்டும். தேவையற்ற கைதுகளை தவிர்க்கவேண்டும்.

“எமது பொதுச் செயலாளர் உடனடியாக விடுவிக்கப்படாவிடில், நாம் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்போம் என்பதை கூறிக் கொள்கின்றோம்” என்றனர்.

மலையகத் தமிழருக்கு தேர்தல் தொகுதி முறைமையும்

# பாரபட்சமாக உள்ளது

தேர்தல் தேவைகளுக்காக தொகுதி எல்லை மீள்நிர்ணயத்தை மறுசீரமைக்காது கலப்பு தேர்தல் முறைமையை அறிமுகம் செய்வது மலையகத் தமிழருக்கு பாதகமானது என முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

ஏனெனில், நிர்வாகத் தொகுதி பொறிமுறை மாத்திரமல்ல. தேர்தல் தொகுதி முறைமையும் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் பாரபட்சமானதாகவே உள்ளன என்றார்.

தேர்தல் சீர்த்திருத்தத்தை யதார்த்தமாக்கிக் கொள்ளும் நோக்கில், ஃபவ்ரல் அமைப்பு



இலங்கை மன்றக் கல்லூரியில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஒழுங்கு செய்திருந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேர்தல் முறைமை மாற்றம் குறித்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை வெளிவந்துள்ள போதும் அதனை இன்னும் பாராளுமன்றம் விவாதித்து உறுதி செய்யவில்லை. அதனை உறுதி செய்தால் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அதனை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் உள்ளது.

இனத்தின் மதத்தின் மொழியின் பெயரில் எனும் அடிப்படையில் கட்சிகளை அமைக்கக் கூடாது என பரவலாக பேசப்படுகிறது. ஆனால் மலையகத் தமிழரைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் நோக்கம் இனத்தை பிரதிநித்துவம் செய்வதற்கு அப்பால் அவர்களுக்கு குடியுரிமைப் பறிப்பால் ஏற்பட்ட அநீதியினாலான உரிமை மறுப்புகளை மீட்பதற்கான அரசியல் செயற்பாடாகவே அமைதல் வேண்டும்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக குடியுரிமைப் பறிப்பால் ஏற்படுத்தப்பட்ட பின்னடைவுகளுக்கு பிராயச்சித்தமாக சிறு தொகுதிகளை அமைத்து அவர்களுக்கு சமவாய்ப்பு வழங்கப்படல் வேண்டும்.

இது குறித்த யோசனைகளை சிவில் சமூகங்களுடன் இணைந்து நாம் தெரிவுக் குழுவுக்கு வழங்கி இருந்தோம். ஆனால், பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையிலே எல்லை மீள்நரணயம் குறித்து தெளிவாக ஏதும் பேசப்படவில்லை. அதனால் எல்லை மீள்நிரணயம் குறித்து தீர்க்கமான வடிவமைப்பைச் செய்து தொகுதிகளை உறுதி செய்த பின்னரே கலப்பு தேர்தல் முறைமையை ஏற்றுக்கொள்வதா இல்லையா எனும் தீர்மானத்துக்கு வரமுடியும் எனவும் தெரிவித்தார்.



மாரதென்னையில்

## மண்சரிவால் 16 பேர் தஞ்சம்

எம்.குமார்

பலாங்கொடையில் பெய்து வரும் கடும் மழையால், பலாங்கொடை- மாரதென்ன தோட்ட முதலாம் பிரிவு லயன் குடியிருப்பு மீது மண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் நான்கு வீடுகள் முற்றாக சேதமாகியுள்ளன. பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

குறித்த லயன் குடியிருப்புக்கு 2016ஆம் ஆண்டு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அங்கு வசித்தவர்களுக்கு வேறு இடத்தில் வீடுகள் கட்டிகொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அது பாதியில் இடைநிறுத்தப்பட்டதால், பாதிக்கப்பட்ட மக்கள் எச்சரிக்கை விடுக்கப்பட்ட வீடுகளுக்கே சென்று வசிக்கும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், நேற்று முன்தினம்(3) தொடக்கம் பெய்த கடும் மழையால், நேற்று (4) அதிகாலை 3.30 மணியளவில் பாரிய மண்மேடு லயன் குடியிருப்பு மீது சரிந்து வீழ்ந்துள்ளது.

மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதியையும் பாதிக்கப்பட்டவர்களையும் பார்ப்பதற்கு இதுவரை எந்தவோர் அதிகாரியும் வருகைத் தரவில்லை என்பதுடன், இவர்களுக்கான எவ்வித உதவியும் இதுவரை கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.



## பாலம் வெள்ளத்தில் மக்களோ முடங்கினர்

என்.ஆராச்சி

பாலமொன்று வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டதால் புளத்கொஹுபிட்டிய - பெலம்பிட்டிய பிரதேச மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

புளத்கொஹூபிட்டிய பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெலம்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பெலம்பிட்டிய கிராமத்தவர்கள் பிரதான போக்குவரத்து மார்க்கமாக பயன்படுத்தி வந்த பாலமானது, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

இதனால் குறித்த கிராமத்தைச் சேர்ந்த 14 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கு தேவையான உலருணவுப் பொருள்கள் பிரதேச செயலக அதிகாரிகளால் கடும் சிரமத்துக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

## காசல்ரி தாழ்நில பகுதிக்கு எச்சரிக்கை

எம்.கிருஸ்ணா

மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையால் நீரேந்தும் பகுதிகளின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்து வருகிறது.

இதற்கமைய, விமலசுரேந்திர நீர் மின் நிலையத்திற்கு நீர் வழங்கும் காசல்ரி நீர்தேக்கத்தோடு இணையும் கெசல்கமுவ ஓயா, ஹட்டன் ஓயா என்பன பெருக்கெடுத்துள்ளமையால் காசல்ரி நீர்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளுக்கு மேல் நீர் நிரம்பி வழியும் தருவாயில் உள்ளது.



எனவே, காசல்ரீ நீர்தேக்க தாழ் நிலப் பகுதிகளில் வசிப்பவர்கள், மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு மின்சார சபையினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



## ஹட்டன் மக்களுக்கு அவசர எச்சரிக்கை

எஸ்.கணேசன்

ஹட்டன் நகரில் சில கட்டடங்கள் இடிந்து விழும் அபாயத்தில் இருப்பதாக புவியியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் நகரின் டிக்கோயா வீதியில் அமைந்துள்ள எம். ஆர். நகர பகுதியில் இடிந்து விழும் கட்டடங்கள் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளை நுவரெலியா மாவட்ட கட்டட ஆய்வு நிறுவன புவியியலாளர்கள் ஆய்வு செய்தனர். அதனையடுத்து, சில கட்டடங்களைச் சோதனையிட்டபோது, இதில் சில கட்டடங்கள் இடிந்து விழும் அபாயத்தில் இருப்பதை அவதானித்ததாக புவியியலாளர் புத்திக விஜேகோன் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள மிகவும் ஆபத்தான நான்கு மாடி கட்டடத்தில் வெடிப்புகள் காணப்பட்டதாகவும், இதனால் அங்கிருந்தவர்களை வெளியேறுமாறு தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்டபுலாவுக்கு விரைந்த ஜீவன் எம்.பி

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவியும் வழங்கினார்

ஆ.ரமேஸ்

கெட்டபுலா, அக்கரவத்த தோட்டத்தில் ஆற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தவர்களை மீட்க மேலதிக படைகளை களத்தில் இறக்க வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறித்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களையும் நேற்று (4) சந்தித்த ஜீவன் தொண்டமான், தனது அனுதாபங்களை தெரிவித்துள்ளதுடன், அந்த குடும்பங்களுக்கு நிதியுதவியும் வழங்கி வைத்தார்.

இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன மூவரில் ஆண் ஒருவரின் சடலம் மாத்திமே



இதுவரையில் மீட்கப்பட்டுள்ளதுடன், ஏனைய இருவரையும் தேடும் பணிக்காக மேலதிக இராணுவத்தினரையும், அதிரடிப்படையினரையும் மீட்பு பணியில் ஈடுபடுத்துமாறு ஜீவன் தொண்டமான் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



## மண்மேடு சரிவால் போக்குவரத்து தடை

துவாரகஷன்

நானுஓயா நகரத்திற்கு அண்மித்த பகுதியில் நேற்று (4) காலை பாரிய மண்சரிவு திடீரென ஏற்பட்டதால் நுவரெலியா - தலவாக்கலை, நுவரெலியா - ஹட்டன், நுவரெலியா - டயகம போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் போக்குவரத்துகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

இதனால் சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் அவ்வீதியினூடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமாகியிருந்தன.

இதனையடுத்து, நுவரெலியா வீதி அதிகார சபை ஊழியர்கள், நுவரெலியா - நானுஓயா பொலிஸார் இணைந்து மண்மேட்டை அப்புறப்படுத்தியுள்ளனர்.

இதனால் தற்போது அப்பகுதியில் ஒரு வழி போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்படுகின்றது. அத்தோடு, இவ்வீதிகளில் பல இடங்களில் ஆங்காங்கே மண்மேடுகள் சரிந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வீதிகளின் ஊடாக வாகனங்களை செலுத்தும் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

மேலும் சரிந்து விழுந்துள்ள மண் மேடுகளை உடனடியாக அப்புறப்படுத்தும் நடவடிக்கையை அதிகாரிகள் முன்னெடுத்தனர்.

## சிம்மாசன உரைக்கு செயல் வடிவம் வேண்டும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய சிம்மாசன உரைக்கு செயல்வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

மலையக மற்றும் வடகிழக்கு மக்கள் தொடர்பாகவும் அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் சம்பந்தமாகவும் 19ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தல் தொடர்பாகவும் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

நாங்கள் அதனை வரவேற்கின்றோம். நாட்டிற்கும் மலையக மக்களுக்கும் ஏற்புடையதான நல்ல திட்டங்களுக்கு மலையக மக்கள் சார்பாக நாமும் ஆதரவளிக்க தயாராகவே உள்ளோம்.

மலையக மக்களின் தொழில், பாதுகாப்பு, காணி உரிமை, வேதன அதிகரிப்பு, அவர்களின்




வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பாக முன்மொழியப்படும் வேலைத்திட்டங்களுக்கு எனது முழுமையான ஆதரவை வழங்குவேன். ஆனால் மலையக மக்கள் வஞ்சிக்கப்பட்டுவார்களேயானால் ஜனாதிபதியின் சொல் வடிவம், செயலில் நிரூபிக்கத் தவறினால் அதனை எதிர்த்து பேசுவதற்கு தான் பாராளுமன்றத்தில் தயாராகவே இருக்கின்றேன்.

அத்துடன் வானிலை மாற்றத்தால் மலையக மக்கள் பாரியதொரு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு உரிய நிவாரணங்கள், பாதுகாப்பு மருத்துவ வசதிகளும் உடனடியாக செயற்பட வேண்டும் என்பதனை ஜனாதிபதியிடம் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன் என்றார்.



## மாணிக்கக்கல்லில் பங்கு கேட்டு ஆர்ப்பாட்டம்

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரிலுள்ள அரச வங்கியொன்றின் பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 15 கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்கக் கல்லை வேறோர் இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கு, வட்டவளை பிரதேச மக்கள் எதிர்ப்பினை தெரிவித்து, குறித்த வங்கிக்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றையும் நேற்று (4) முன்னெடுத்தனர். வட்டவளை சமுரத்தி பயனாளிகளை இணைத்துக்கொண்டு, இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை, வட்டவளை- மவுண்ட்ஜின் தோட்டத்தில் உள்ள ஹட்டன்ஓயா ஆற்றில் மாணிக்கக்ல் அகழ்வை முன்னெடுத்தது.

இதன்போது கிடைக்கும் மாணிக்கக்கற்களை விற்பனை செய்யும் போது கிடைக்கும் பணத்தில் 10 சதவீதம் சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்க ஒப்பந்தமும் செய்யப்பட்டது.

இதன்போது அகழப்பட்ட 15 கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்க கல் ஒன்று, ஒரு வருடமாக ஹட்டனிலுள்ள அரச வங்கியொன்றின் பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு வைக்கப்பட்டிருந்த மாணிக்கக்கல் மதிப்பீடு செய்வதற்காக இரத்தினபுரிக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, சமுர்த்தி பயனாளிகள் அதற்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

எனினும் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த மாணிக்கக் கல்லானது, பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் இரத்தினபுரிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## 3 வருடங்களின் பின் மௌலவி விடுதலை

சுமணசிறி குணதிலக

தேசிய பாதுகாப்பு தொடர்பில் தகவல்களை பெற்றுத் தருமாறு மதத் தலைவர்களை தெளிவுப்படுத்திய நிலையில், அடிப்படைவாத குழு ஒன்றின் கடிதம் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினரை தெளிவுப்படுத்தாமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டிருந்த மொனராகலை ஜும்மா பள்ளிவாசலின் மௌலவிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மௌலவிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவரை குறித்த குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து விடுவிக்குமாறு மொனராகலை மாவட்ட நீதவான் ஏ.எல். சஜினி சமரவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி மொனராகலை பொலிஸாரால் ஜம்மா பள்ளிவாசலிலிருந்து குறித்த கடிதம் கைப்பற்றப்பட்டு, மௌலவியும் கைதுசெய்யபட்டிருந்தார்.

அவருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் 199ஆவது கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இதனையடுத்து கடந்த 3 வருடங்களாக விசாரிக்கப்பட்டு வந்த வழக்கிலிருந்து சந்தேகநபர் விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## டெங்குவால் நால்வர் மரணம்

என்.ஆராச்சி

கேகாலை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளனர் என கேகாலை மாவட்ட சுகாதார சேவை அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த 4 மரணங்களும் தெஹியோவிட்ட, கேகாலை, ரம்புக்கனை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை கேகாலை மாவட்டத்திலுள்ள 11 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் 1,639 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என இதில் அதிகமானவர்கள் மாவனெல்ல, கேகாலை, தெஹியோவிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலையைத் தூக்கும் துப்பாக்கிகளின் தலைகளை கொய்யவேண்டும்

நீண்ட காலத்துக்குப் பின்னர், நாளொன்றில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டு, மூன்று துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றன. அவையாவும் பட்டப்பகலில் பகிரங்கமாக இடம்பெறுகின்றன. இதனால், நாட்டில் சட்டம் என்றொன்று இருக்கிறதா என்பதே கேள்விக்குறியாகிவிட்டது.

சில துப்பாகிப்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்ட முறைமைதொடர்பில் சிசிரிவி கமெரா காட்சிப்பதிவுகளைப் பார்த்தால், 'சர்வசாதாரணம்' என்றுதான் கூறவேண்டும். பலரும் பார்த்திருக்கையில், சர்வசாதாரணமாக வந்து துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தலைமறைவாகிவிடுகின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள் தொடர்பில், சந்தேகத்தின் பேரிலாவது எவரேனும் கைதுசெய்யப்படவில்லை. அவ்வாறு கைது செய்யப்பட்டு இருப்பார்களாயின், பொலிஸ் ஊடக அறிக்கை விட்டிருக்கும். இல்லையேல், சந்தேகநபர்களிடமிருந்து மேலதிக தகவல்களை கறக்கவேண்டுமாயின், சந்தேகநபர் தொடர்பிலான தகவல்களை பொலிஸ் தரப்பு வெளியிடாது.

ஆனாலும், வீதிகளிலேயே நிற்க வேண்டிய நிலையிலிருக்கும் மக்கள், வீடுகளை விட்டு தலைகாட்டுவதற்கே அச்சம் கொண்டுள்ளனர். அந்தளவுக்கு துப்பாக்கிக் கலாசாரம் தலைத்தூக்கிவிட்டது. இறுதியாக நீதிமன்றத்துக்குள்ளும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது பாதுகாப்புக்கு விடுக்கப்படும் அதியுச்சபட்ச அச்சுறுத்தலாகும்.

கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, துப்பாக்கியை எடுத்தவர், பிரதிவாதி தரப்பு பக்கத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். தெய்வாதீனமாக எவருக்கும் ஆபத்துகள் ஏற்படவில்லை. துப்பாக்கிதாரியும் கைதுசெய்யப்படவில்லை.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால், அதற்கென சட்டவரைமுறை இருக்கிறது. தண்டனையை நடுவீதியில் வழங்க இயலாது. நீதிமன்றத்தின் ஊடாகவே வழங்கவேண்டும். அவ்வாறு இருக்கையில், ஒருவரையொருவர் பழிவாங்கும் நோக்கில், துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்படுமாயின், சாதாரண மக்கள் மத்தியில் கடுமையான அச்சுறுத்தலாகவே அவை இருக்கும்.

தீய செயல்களை ஆரம்பத்திலேயே முடக்காவிடின் அது வளர்ந்து விருட்சமாகிவிடும். அதன்பின்னர் வேரோடு அறுப்பதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டிய வரும். சில சந்தர்ப்பங்களில் அது சாத்தியமாகும். இல்லையேல் கிளைகள் உருவாகி ஆட்டங்காணச் செய்துவிடும்.

ஆகையால், சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகளையும் வெடிப்பொருட்களையும் வைத்திருப்போரை இனங்கண்டு, அவர்களை கைது செய்து, அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்டத்தின் ஊடாக தண்டனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி, நீதிமன்றம் உள்ளிட்ட மக்கள் கூடுதலாக ஒன்றுதிரளும் இடங்களின் பாதுகாப்பை பொலிஸார் உறுதிப்படுத்தவேண்டும். சட்டவிரோதமான ஆயுதங்களை வைத்திருப்போர் ஒப்படைக்கலாம் என்றொரு பொது அறிவிப்பை விடுத்து, காலவரையறை விதிக்கலாம். அதுமட்டுமன்றி தலையைத்தூக்கியிருக்கும் துப்பாக்கி கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க அதிரடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எந்தவித விருப்பமும் இன்றி வாழமுடியாது. விருப்பமே இல்லாமல் இருந்தால், விரக்திதான் உருவாகும். மனிதன் சடம் அல்லன்.

நல்ல விடயங்களில் நாட்டம் இல்லாமல் வாழ்வதால் சந்தோசம் அற்றுப்போய்விடும். கலைகளை இரசிப்பதுடன், கலைஞராகவும் வரவேண்டும்.

பொதுப்பணி புரிதல், நெஞ்சத்தில் ஆரோக்கியத்தை உண்டுபண்ணும். எமக்கான பொழுதுகள் நீண்டவை. ஆனால், அதில் வந்துபோகும் ஒவ்வொரு வினாடியும் பெரும் பயன் தருபவை.

புதிதுபுதிதாகக் கற்பனைகளைத் தேடுக! அதைச் செயலுருவில் கொண்டுவருக. நேரம் போவதே தெரியாது. நேரத்தை எப்படிக் கழிப்பது என்பது பலரின் கவலையாகும்.

இந்தப் பேச்சுகள் சோம்பேறிகளுக்கே உரியன. "நேரம் போதாது" என்று, ஓடிஓடி உழைப்பவர்களுக்கு ஏது ஓய்வு?

ஒவ்வொருவரின் முயற்சிகளை கண்ணெதிரே கண்டபின்னர் கூட, சதா உறங்குபவர்களை என்ன என்பது? நல்லவைகளை விரும்புங்கள்; கெட்டவைகளை தூக்கி எறியுங்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# களத்தில் குதித்துள்ள பொருளாதார அடியாட்கள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையர்களின் கதையாடல்கள், இப்போது வேறு தளத்தை நோக்கி நகர்ந்துள்ளன. இன்னும் சரியாகச் சொல்வதானால் நகர்த்தப்பட்டுள்ளன.

நேற்றுவரை போராட்டத்துக்கும் போராட்டக்காரர்களுக்கும் ஆதரவாக இருந்தவர்கள், கருத்துரைத்தவர்கள் பலர் இன்று அரசாங்கத்துடன் ஐக்கியமாகி, பதவிகளைப் பெற்றுள்ளார்கள். அவர்கள், போராட்டத்துக்கும் போராட்டக்காரர்களுக்கும் எதிராக, இன்று கருத்துரைக்கிறார்கள்; அவ்வாறான கருத்துருவாக்கம் ஒன்றைச் செய்கிறார்கள்.

இன்னொரு தரப்பினர், பொருளாதார மீட்சியின் அவசரம் பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள், போராட்டக்காரர்களை அமைதிகாக்கும்படி கோருகிறார்கள்.

மற்றுமொரு தரப்பினர், போராட்டம், வன்முறையைக் கையில் எடுத்ததை அனுமதிக்கவோ அங்கிகரிக்கவோ முடியாது என்றும் சட்டம் தன் கடமையைச் செய்ய வேண்டும் என்றும் கோருகிறார்கள்.

இவ்வாறெல்லாம் கோருகிறவர்கள், அடுத்த வேளை உணவுக்கோ, எரிபொருளுக்கோ போராடுபவர்கள் அல்ல. களத்தில் நின்று கண்ணீர்புகையையும் நீர்த்தாரையையும் எதிர்கொண்டது, இவர்களது பிள்ளைகளும் அல்ல. போராடுவதும் மாற்றத்தைக் கோருவதும் மிகச் சாதாரணமான இலங்கையர்களே ஆவர். இன்று, இவர்களை நோக்கியே ஜனாதிபதி முதல் அனைவரும், இவ்வாண்டு இறுதிவரை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கோருகிறார்கள்.

இன்றைய இலங்கையின் சித்திரம் கவலைக்கிடமானது. அதுகுறித்துப் பேசுவார் யாருமில்லை. அண்மையில், உலக உணவுத்திட்டம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அச்சம் தருபவை. '63 இலட்சம் இலங்கையர்களுக்கு உணவுப் பாதுகாப்பு இல்லை. இலங்கையின் மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் உணவு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். சத்தான உணவுகளின் விலைகள் பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் இருந்ததை விட, ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது' என்றும் இவ்வறிக்கை சுட்டுகிறது.

அதேவேளை, இலங்கையின் உணவு இறக்குமதிக்காக மாதந்தோறும் செலவிடப்படும் தொகை 130 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 50 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது. இது உணவின்மையையும் பட்டினியையும் அதிகரித்துள்ளது.

விவசாய அமைச்சின் புள்ளிவிவரங்களின் படி, இலங்கையில் திரவ பால் உற்பத்தி 20 சதவீதமும் முட்டை உற்பத்தி 35 சதவீதமும் கோழி இறைச்சி உற்பத்தி 12 சதவீதமும் குறைந்துள்ளன. கால்நடை தீவனம் சரியான முறையில் உற்பத்தி செய்யப்படாமையே இந்நிலைமைக்கு பிரதான காரணம் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நிறையுணவாகக் கருதப்படும் பாலினதும் முட்டையினதும் உற்பத்தி வீழ்ச்சியானது, போசாக்குத் தொடர்பான ஏராளமான வினாக்களை எழுப்புவதோடு, நீண்டகாலப் பாதிப்புகளை இலங்கையர்களுக்கு ஏற்படுத்தவல்லது.

பாராளுமன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, மக்கள் கஷ்டங்களை தாங்கிக்கொள்ளப் பழக வேண்டும் எனத் தெரிவித்தார். இதையே பொருளாதார வல்லுனர்கள் எனப்படுவோர் சொல்கிறார்கள். முன்னாள் மத்தியவங்கி ஆளுநரான இந்திரஜித் குமாரசுவாமி, அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மானியங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அண்மையில் தெரிவித்திருந்தார்.

பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு குறித்துப் பேசுகின்ற அனைவரும், ஒரே தொனியில் பேசுகிறார்கள். சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதே ஒரே வழி; இலங்கை கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்; மானியங்கள் நிறுத்தப்பட வேண்டும்; அரச நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட வேண்டும். இவையே இவர்களது தீர்வாக இருக்கிறது.

இவை அனைத்தும், சாதாரண மக்களின் மீது பொருளாதாரத்தின் சுமையை ஏற்றும் தீர்வுகளே ஆகும். சர்வதேச நாணய நிதியத்திடம் மண்டியிடத் தயாராகவுள்ள இலங்கை அரசாங்கம், இலங்கை மக்களை முழுமையாக அடகுவைக்கிறது.

மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுகின்ற, மானியங்களைக் குறைக்கின்ற, தனியார்மயத்தை துரிதப்படுத்துகின்ற நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவு வழங்குவோர், செல்வந்தர்களின் பங்கு என்ன என்பது பற்றி வாய் திறப்பதில்லை.

அண்மையில் ஒரு தொலைக்காட்சி நேர்காணலில், மத்திய வங்கியின் ஆளுநர் மிகமுக்கியமான ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். மாதந்தோறும் இலங்கைக்கு ஏற்றுமதி வருமானமாகக் கிடைக்கும் தொகை, ஒரு பில்லியன் (1,000 மில்லியன்) அமெரிக்க டொலர். இதில் 800 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்குத் திரும்பி வருவதில்லை. அவை, இலங்கைக்கு வெளியே பதுக்கப்படுகின்றன. அவை நாட்டுக்குள் வந்தால், மாதாந்த எரிபொருள், உணவு, மருந்துகளைக் கொள்வனவு செய்யப் போதுமானவையாக இருக்கும்.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை மீண்டும் நாட்டுக்குள் கொண்டுவருதற்கான 2021ஆம் ஆண்டின் 5ம் இலக்க விதியின் படி முழு வருமானமும் அந்நியச் செலாவணியில் நாட்டுக்குள் வந்தாக வேண்டும். ஆனால், அது நடைபெறுவதில்லை. இக்குற்றவாளிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பதுமில்லை.

அதேவேளை, இலங்கையின் வரிவிதிப்பு முறைகள் அரசாங்கத்தின் மிகக்கேவலமான முகத்தை வெளிக்காட்டுகிறது. முத்துகள், வைரங்கள், உயர்ரகக் கைக்கடிகாரங்கள், உடற்பயிற்சி உபகரணங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு, வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பெண்களுக்கு அவசியமான மாதவிடாய்கால துணிகளுக்கு 43சதவீத வரியும் குழந்தைகளுக்கான அணையாடைகளுக்கு 15சதவீத வரியும் விதிக்கப்படுகிறது. இவ்வாறான வரிவிதிப்புகளையும் வரிச்சலுகைகளையும் உருவாக்கிய அதிகாரிகள், அங்கிகரித்த அரசாங்கம் என்பன, மிகச்சாதாரணமான இலங்கையர்களுக்கு சொல்லும் செய்தி என்ன?

இலங்கையில் பொருளாதார அடியாட்கள், பல்வேறு வகைகளில் இயங்குகிறார்கள். ஒருசிலர், இவ்வாறு நாட்டுக்குள் வரவேண்டிய அந்நியச் செலாவணியை வெளிநாட்டில் பதுக்குகிறார்கள்.

இன்னும் சிலர் அரசாங்கப் பதவிகளில் இருந்தபடி, இவ்வாறான செயற்பாடுகளுக்கு வசதி செய்து கொடுக்கிறார்கள். இவ்வாறான செயல்கள் தொடர அனுமதியளிக்கிறார்கள். இவர்கள் அனைவரும், நாட்டுக்குள் இயங்கும் செயற்பாட்டுப் பொருளாதார அடியாட்கள்.

இன்னும் சிலர் அரசாங்கத்தின் கொள்கைவகுப்பில் செல்வாக்குச் செலுத்தும் பொருளாதார அடியாட்கள். அவர்கள் தான் சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடையக் கோருவது, சமூகநல வெட்டுகளைக் கோருவது போன்ற வேலைகளைச் செய்பவர்கள்.

மூன்றாவது வகை, நாட்டின் தலைவர்களாக, அமைச்சர்களாக இருந்து நேரடியாக, நவதாராளவாதத்தின் அடியாட்களாக இயங்குபவர்கள். இவர்கள் அனைவரும் வகைதொகையின்றி இலங்கையில் உலா வருகிறார்கள்.

இந்தப் பொருளாதார அடியாட்கள், வரன்முறையின்றி இயங்குவதற்கு இயல்பான எதிர்ப்பு உருவாகாத சூழல் அவசியம். அதையே போராட்டக்காரர்களை நசுக்குவதன் ஊடு, அரசாங்கம் செய்ய முயல்கிறது.

பொருளாதார அடியாட்களோடு, ஊழலும் அதிகாரத் துஷ்பிரயோகமும் பின்னிப் பிணைந்தவை. இல்லாவிட்டால் மத்திய வங்கிப் பிணைமுறி விடயத்தில், இலங்கையால் தேடப்படுகின்ற குற்றவாளியை 'சீஎன்என்' தொலைக்காட்சி பேட்டி எடுக்கிறது. அவரும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது பற்றி வகுப்பெடுகிறார். இதையெல்லாம், கேட்டுக்கேள்வியின்றி சகிக்க வேண்டிய நிலையில்தான் இலங்கையர்கள் இருக்கிறார்கள்.

இந்தப் பொருளாதார அடியாட்களும் அவர்தம் துதிபாடிகளும் அடிக்கடி சொல்கின்ற இரண்டு விடயங்களை சுருக்கமாகப் பார்ப்போம்.

முதலாவது, அரச சேவையில் பணியில் உள்ளவர்களைக் கணிசமாகக் குறைக்க வேண்டும் என்பது. இந்த அடியாட்களது கோரிக்கை யாதெனில், பணியாட்களைக் குறைத்து, துறைகளைத் தனியார்மயமாக்க வேண்டும் என்பதாகும். தனியார்மயமாக்குவதன் ஊடு வினைத்திறனான சேவை கிடைக்கும் என்பதே இவர்களின் வாதம்.

இலங்கையில் வெற்றிகரமாக இயங்கிவந்த அரச பஸ் சேவையை, 1979இல் தனியார்மயமாக்கியதன் கோர விளைவுகளை, இலங்கையர்கள் நன்கு அறிவார்கள். இன்றும் பின்தங்கிய கிராமங்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களே செல்கின்றன. அரசசேவையைத் தனியார்மயமாக்குவது எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு, பஸ் சேவை தனியார்மயமாக்கம் நல்லதோர் உதாரணம்.

இலங்கையின் அரசதுறையின் அரசியல்மயமாக்கமும், வாடிக்கையாளர் அரசியலும் வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் சீரழித்துள்ளன. அதேவேளை இலங்கையில் எஞ்சியுள்ள சமூகநலன்கள் அடித்தட்டு மக்களுக்குப் போய்ச் சேர்வதற்கு, வினைத்திறனான அதேவேளை போதுமான ஊழியர்களைக் கொண்ட அரசசேவை அவசியம்.

ஆட்கள் குறைப்பு பற்றிய விடயத்தில், நாம் ஒன்றைக் கவனிக்கத் தவறுகிறோம். இலங்கையில் 1.5 மில்லியன் பேர் அரசபணிகளில் இருக்கிறார்கள், சராசரியாக 100 பேருக்குப் பணிசெய்வதற்கு 6.8 பேர். ஐரோப்பாவில் சராசரியாக 100க்கு7, ஸ்கன்டிநேவியாவில் சராசரி 100க்கு 9.

இலங்கை போன்ற அசமத்துவங்கள் நிறைந்த, குறைந்த வருமானமுடைய ஒரு நாட்டின் நலனுக்கு, அரசசேவையே அச்சாணி.

ஐ.நாவின் சமூகக் குறிகாட்டிகளில் ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கை முன்னணியில் இருப்பதும், குறிப்பாகக் கல்வியிலும் மருத்துவத்திலும் இலங்கை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையான குறிகாட்டிகளைக் கொண்டிருப்பதையும் சாத்தியமாக்கியது, இலவசக் கல்வியும் இலவச மருத்துவமுமாகும்.

பொருளாதார அடியாட்கள் எம்மிடம் மீதமுள்ள சமூக நலன்களையும் அது தருகின்ற வளமான கல்வி, நலமான உடல்நிலை ஆகியவற்றையும் பறித்து, அனைத்தையும் வியாபாரமாகவும் இலாபத்துக்கானதாகவும் மாற்ற முயல்கிறார்கள்.

அவதானமாக இல்லாவிடின், துன்பத்தில் உழல்வது எமது எதிர்காலச் சந்ததியும்தான் என்பதை நினைவில் கொள்க!

## கடிதங்கள்

### வெள்ளம் காரணமாக விவசாயிகள் பாதிப்பு

மலையகத்தில் மூன்று நாள்களாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக, தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல், குடும்ப வருமானத்துக்காக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த அதிகமானோர், தமது தோட்டங்களில் பயிரிடப்பட்ட மரக்கறி வகைகள் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டதால், விவசாயிகள் பாரிய நட்டத்தை அடைந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கொட்டகலை, பத்தனை, கிறேக்கிலி தோட்டம் போன்ற பகுதிகளிலேயே இவ்வாறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். டெவோன் நீர்வீழ்ச்சிக்கு நீரை ஏந்தும் கிளை ஆறான பத்தனை ஆறு, பெருக்கெடுத்ததால் மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியதால் இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதிகமான விவசாயிகள், விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தங்க நகைகளையும் அடகு வைத்து, கடன் தொகையை பெற்று விவசாய நடவடிக்கையை மேற்கொண்டனர். செலவு செய்த தொகையை கூட மீட்க முடியாத அளவுக்கு, வெள்ளப்பெருக்கால், பாரிய பொருளாதார பிரச்சினைகளை சந்திப்பதாக, விவசாய குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் இதேபோன்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நுவரெலியா மாவட்ட விவசாய திணைக்களம் எவ்வித நிவாரண உதவிகளையும் தரவில்லை என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள், மீண்டும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் உதவிகளை வழங்க வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கையாகும்.

–எஸ். கணேசன்

புதுடெல்லி

இலவசங்களை கட்டுப்படுத்த

# உயர்நிலைக் குழுவை அமைக்க வேண்டும்



தேர்தல் நேரங்களில் அரசியல் கட்சிகளால் அறிவிக்கப்படும் இலவசங்களை கட்டுப்படுத்த உயர்நிலைக் குழுவை அமைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

தேர்தல் நேரத்தில் வாக்காளர்களை கவர, அரசியல் கட்சிகள் அறிவிக்கும் இலவச பொருட்கள், வாக்குறுதிகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அதில் தேர்தல் பிரசாரத்தில், அரசு நிதியில் இருந்து இலவச திட்டங்களை வழங்குவோம் என வாக்குறுதி அளிப்பது இலஞ்சம் கொடுப்பதற்கு இணையானது. இதை தடுக்க வேண்டுமென கூறப்பட்டது.

இந்த மனு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி. ரமணா, நீதிபதிகள் கிருஷ்ணா முராரி மற்றும் ஹிமா கோலி ஆகிய 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன் நேற்று முன்தினம் (03) விசாரணைக்கு வந்தது. சொலிசிடர் ஜெனரல் துஷார் மேத்தா வாதிடுகையில், "தேர்தல் பிரசாரத்தில் அரசியல் கட்சிகள் இஷ்டத்துக்கு இலவச அறிவிப்புகளை வெளியிடுவது பொருளாதார சீரழிவுக்கு வழி வகுக்கும்" என்றார்.

அப்போது நீதிபதிகள் கூறியதாவது: தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் அறிவிக்கும் இலவச திட்டங்களை கண்காணிக்க நிபுணர் குழு தேவை. இந்த குழுவில் நிதி ஆயோக், நிதி ஆணையம், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ரிசர்வ் வங்கி மற்றும் இதர தரப்பினர் இடம் பெற வேண்டும். அவர்கள் தேர்தல் பிரசாரத்தின் போது அரசியல் கட்சியினரின் இலவச அறிவிப்புகளை கட்டுப்படுத்துவது பற்றிய ஆலோசனைகளை மத்திய அரசு, தேர்தல் ஆணையம் மற்றும் உச்ச நீதிமன்றத்துக்கு வழங்க வேண்டும்.

அத்துடன்,அரசியல் கட்சியினர் அறிவிக்கும் இலவச வாக்குறுதிகள் நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதால், அதன் சாதக, பாதகங்களை தீர்மானிக்க இந்த குழு தேவை. இந்த நிபுணர் குழு அமைப்பது குறித்து மனுதாரர்களும், மூத்த வழக்கறிஞரும், எம்.பி.யுமான கபில் சிபல் ஆகியோரும் ஒரு வாரத்துக்குள் பதில் அளிக்க வேண்டும். தேர்தல் ஆணையம் சரியான நடவடிக்கை எடுக்காததால், இந்த நிலை ஏற்பட்டது என நீதிபதிகள் கூறினர்.

SEDR திட்டத்தின், Active Citizens

# முதல் கட்ட திட்ட நடைமுறைப்படுதல் பூர்த்தி



பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் பிரிட்டிஷ் கவுன்ஸிலினால் செயல்படுத்தப்படும் நான்கு வருட நீதிக்கான அணுகல் திட்டமாகும். இது ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் மேற்கொள்ளும் நிலைமாற்றம், நல்லிணக்கம் மற்றும் உள்ளடக்கிய ஜனநாயக ஈடுபாட்டை வலுப்படுத்துதல் (STRIDE) நிகழ்ச்சியின் ஒரங்கமாகும். SEDR இன் அடிப்படை நோக்கம் அமைதியான சகவாழ்வு மற்றும் நியாயமான மற்றும் நீதியான இலங்கைக்கான அபிலாஷையாகும். டிசம்பர் 2021 மற்றும் ஜூன் 2022 க்கு இடையில், SEDR இனால், சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், சனசமூக பிணக்குத் தீர்வை மேம்படுத்துவதற்கும், உள்ளூர் பிணக்குத் தீர்வு மற்றும் சமூக உள்வாங்கல் ஆகியவற்றின் பக்கம் பலத்த கவனம் செலுத்தி சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மூன்று SEDR Active Citizensதிட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்தத் தொடங்கியது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் SEDR இன் மூன்று இலக்கு மாகாணங்களிலும் (வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா) நடத்தப்பட்டதோடு, அதன் முதல் கட்டம் அண்மையில் பூர்த்தி செய்யப்பட்டது.

Active Citizens என்பது ஒரு சமூக தலைமைத்துவ பயிற்சி முறையாகும், இது 10 ஆண்டுகளுக்கும் மேலாக உலகெங்கிலும் உள்ள பிரிட்டிஷ் கவுன்சிலால் வெற்றிகரமாக வழங்கப்பட்டு வருகிறது, இது கலாச்சார உரையாடல் மற்றும் சமூகம் தலைமையிலான சமுதாய மேம்பாட்டை ஊக்குவிக்கின்றது மற்றும் சமூகங்களுக்குள் மற்றும் சமூகங்களுக்கிடையேயும் நம்பிக்கையை வளர்கின்றது. சமூக அளவிலான பிணக்குகளைத் தீர்ப்பதில் மாற்றுவழிமுறைகளை ஆதரிப்பதற்கான SEDR இன் அணுகுமுறையில் Active Citizens வழிமுறையானது முக்கியப் பங்கு வகிக்கிறது.

SEDR Active Citizens இல் சமூகத்தில் பல்வேறு ஆர்வங்கள் மற்றும் திறன்களைக் கொண்ட நபர்கள் தங்களை ஒன்றிணைத்துக்கொண்டனர். பின்னர் அவர்கள் பெற்ற திறன்களைக் கொண்டு அவற்றிக்கு செயல்வடிவம் கொடுத்து ஒரு தனித்தனியான சமூக முனைப்புக்கள் (சமூக செயல் திட்டங்கள்) மூலம் நடைமுறைப்படுத்தினர். இத்திட்டங்கள் தன்னார்வதொண்டர்கள், அரசு மற்றும் அரசு சாராத பங்குதாரர்கள் மற்றும் சமூகத்தின் ஆதரவுடன் இளைஞர்களால் அவர்களின் சமூகத்திற்குள் வடிவமைக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு செயல்படுத்தி முடிக்கப்பட்டன. மார்ச் முதல் ஜூன் 2022 வரையான கலப்பகுதியினுள் SEDR Active Citizens15 சமூக செயல் திட்டங்களை செயல்படுத்தினர். இவை அவர்களின் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சர்ச்சைகளை மையமாகக் கொண்டது.

ஒருவரின் அடையாளம் மற்றும் கலாச்சாரம் பற்றிய சுய விழிப்புணர்வு, நம்பிக்கை மற்றும் ஒருவருக்கொருவர் உறவுகளை வலுவாக்குதல், உரையாடலை ஊக்குவிக்க மற்றும் எளிதாக்குவதற்கான கருவிகள் மற்றும் நுட்பங்களை ஆராய்தல், பிரச்சனையை கண்டறிதல், பிரச்சனையைத் தீர்ப்பது, சமூக இசைவாக்கம் மற்றும் பிணக்கு மேலாண்மை மற்றும் தலைமைத்துவம் ஆகிய திறன்களை உள்ளடக்கியதாக பயிற்ச்சி வழங்கப்பட்டது.

SEDR குழுத் தலைவர் ஜாக் கார்ஸ்டென்ஸ் கருத்து தெரிவிக்கும்போது: "பிரிட்டிஷ் கவுன்சிலின் Active Citizens மாதிரியானது, இலங்கையில் சமூக அளவிலான பிணக்குத் தீர்வு முயற்சிகளை வலுப்படுத்தும் SEDR இன் லட்சியத்திற்கு மிகவும் பொருத்தமானது என நிரூபிக்கப்பட்டுள்ளது. Active Citizens அணுகுமுறையால் பெண்கள் மற்றும் இளம் தன்னார்வலர்கள் எவ்வாறு வளர்ச்சியடைந்து, பயனடைந்துள்ளனர் என்பதும், மற்றும் அவர்களின் சொந்த உள்ளூர் சமூகங்களை பாதிக்கும் முரண்பாடுகளின் சில அடிப்படை காரணங்களை நிவர்த்தி செய்ய அவர்களின் புதிய அறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்துவதைப் பார்ப்பதும் மிகவும் ஊக்கமளிக்கிறது" என்று குறிப்பிட்டார்.

Active Citizens மாதிரியைப் பயன்படுத்தி, Active Citizens திட்டத்தின் 2 ஆம் கட்டத்தின் மூலம் உள்ளூர் இளைஞர்கள் மற்றும் பெண்கள் வீரர்களின் திறனை மேலும் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் இலங்கையின் வடக்கு, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சமூகங்களை உள்வாங்கிய, சூழலுக்கு ஏற்ற மற்றும் நேர்மறையான மாற்றங்களை உருவாக்கும் சமூக செயல் திட்டங்களை வழங்க அவர்களுக்கு ஆதரவளிப்பதை SEDR நோக்கமாக கொண்டுள்ளது.

பெங்களூரு



# 119 சிறுவரை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை

கர்நாடகத்தில் பாதுகாப்பு மையங்களில் இருந்து தப்பியோடிய 119 சிறுவர்கள் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று உச்ச நீதிமன்றத்தில் அரசு அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

பொதுநல மனு தாக்கல் கர்நாடகத்தில் குழந்தைகள் பாதுகாப்பு மையத்தில் இருந்து தப்பி சென்ற குழந்தைகள் பற்றியும், அவர்களை கண்டுபிடிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கும்படி கோரி கர்நாடக உச்ச நீதிமன்றத்தில் கோலார் மாவட்டத்தை சேர்ந்த ராஜண்ணா என்பவர் ஒரு பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது.

அந்த மனு மீதான விசாரணை, கர்நாடக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி (பொறுப்பு) அலோக் ஆராதே மற்றும் நீதிபதி விஸ்வஜித் ஷெட்டி முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

கடந்த விசாரணையின் போது மாநிலத்தில் காணாமல் போன குழந்தைகள் பற்றியும், அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி அரசு வக்கீலுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டு இருந்தனர்.

சென்னை




# போக்குவரத்து விதிமீறினால் அபராதம் செலுத்த க்யூஆர்

சென்னையில் போக்குவரத்து விதிமீறல் அபராதம் செலுத்தும் க்யூஆர் வசதி பொலிஸாரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையில் மார்ச் 2018 முதல் பணமில்லா இ-சலான் முறையில் அபராதம் வசூலிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்குப் பிறகு, போக்குவரத்து அதிகாரிகள் விதிகளை மீறுபவர்களுக்கு சம்மன்களை மட்டுமே வழங்கினர் மற்றும் போக்குவரத்துக்கு அபராதம் வசூலிக்கவில்லை.பேடிஎம், ஏடிஎம் அட்டை, ஆன்லைன், இ-சேவை மையம் மற்றும் தபால் நிலையங்கள் மூலம் வாகன ஓட்டிகள் தங்கள் விதிமீறல்களுக்கு அபராதம் செலுத்துகின்றனர்.

ஆரம்ப கட்டங்களில் அபராதம் செலுத்துவது நன்றாக இருந்தபோதிலும், விதி மீறுபவர்கள் பலர் அபராதம் செலுத்தாததால் அது காலப்போக்கில் தேக்கமடைந்தது. இந்தச் சிக்கலை சரி செய்ய 12 அழைப்பு மையங்கள் மூலம் தொலைபேசி அழைப்புகளைச் செய்து, நிலுவையில் உள்ள விதி மீறல்கள் குறித்து மீறுபவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒரு வாரத்திற்குள் அபராதம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது, இல்லையெனில் வழக்குகள் மெய்நிகர் நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பெங்களூரு

# எருமை மாட்டுக்கு பிறந்தநாள் கொண்டாடினர்

பாகல்கோட்டை மாவட்டம் மகாலிங்கபுரா அருகே ரன்னபெலஹள்ளி கிராமம் உள்ளது. இந்த கிராமத்தை சேர்ந்தவர் சித்து மகாதேவ தாரி. இந்த நிலையில் கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு சித்து, ஒரு எருமை மாட்டை வாங்கி இருந்தார்.

அந்த எருமை மாட்டின் பாலை சித்து விற்பனை செய்து வருகிறார். இந்த நிலையில் அந்த எருமை மாட்டின் முதலாவது பிறந்தநாளை சித்து தனது குடும்பத்தினருடன் சேர்ந்து நேற்று கொண்டாடினார். அப்போது கேக் வெட்டிய சித்து, எருமை மாட்டிற்கும் கேக் ஊட்டி மகிழ்ச்சி அடைந்தார். மேலும் உறவினர்களுக்கும் சித்து உணவு அளித்தார்.



பெங்களூரு

# காதலிக்காக மலசலக்கூடத்தில் காத்திருந்த காதலன் சிக்கினார்

கர்நாடக மாநிலம் பெங்களூரை சேர்ந்த 27 வயதான இளைஞனின் காதலிக்கு கடந்த 28 ஆம் திகதி பிறந்த நாளாகும். அதனால் அந்த பெண்ணுக்கு வித்தியாசமான பரிசு ஒன்றை கொடுத்த அசத்த வேண்டுமென அவ்விளைஞன் ஆசைப்பட்டார்.

அதன்படி, விலையுயர்ந்த அலைபேசியை பரிசாக கொடுக்க முடிவு செய்தான். இதை தொடர்ந்து ஜேடிபி நகர்ப்பகுதியில் இயங்கி வரும் மிகப்பெரிய செல்போன் நிலையமொன்றுக்குள் இரவு நுழைந்தார். அப்போது அந்த விற்பனை நிலையம் மூடும் நேரம் என்பதால், ஊழியர்கள் தயாராகி கொண்டிருந்தனர். உடனே இந்த இளைஞன் யாருக்கும் தெரியாமல் கடையின் மலசலக்கூடத்துக்குள் சென்று ஒளிந்துகொண்டான்.

கடையை ஊழியர்கள் மூடிவிட்டு சென்றபிறகு, மலசலக்கூடத்தில் இருந்து வெளியே வந்த இளைஞன், விலைஉயர்ந்த அலைபேசியை தேடினார். அங்கு வைக்கப்பட்டிருந்த அனைத்து அலைபேசிகளும் அழகாக இருந்ததால், அவைகளில் இருந்து 7 அலைபேசிகளை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டான். பிறகு மறுபடியும் அதே கடையின் மலசலக்கூடத்துக்குள் ஒளிந்து கொண்டான். மறுநாள் காலை வரை அங்கேயே பதுங்கி இருந்துள்ளார்.

காலையில் வழக்கம்போல், ஊழியர்கள் கடையை திறந்து வந்துள்ளனர். இவரும் எதுவும் தெரியாததுபோல், மலசலக்கூடத்தில் இருந்து வெளியேறி சென்றுவிட்டார். ஆனால் அவர் எடுத்து சென்ற அலைபேசிகளில் ஒன்று கீழே விழுந்து கிடந்துள்ளது. அதைப்பார்த்த கடை ஊழியர் ஒருவர், அப்போதுதான் கடையை திறந்துள்ள நிலையில், கீழே எப்படி அலைபேசி விழுந்திருக்கும் என்று ஆராயந்தபோது, மேலும் சில அலைபேசிகள் காணாமல் போனமை தெரியவந்தது. இதையடுத்து, உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

ஐஎம்இஐ நம்பரை வைத்து, திருடப்பட்ட அலைபேசிகள் இருக்கும் இடமும், பாவிப்பவரின் விவரங்களும் தெரியவந்தன. பிறகு பொலிஸார் அவரை கைது செய்தனர்.

# யூனியன் அஷ்யூரன்ஸ், பான் ஏசியா வங்கியுடன் பங்காண்மை



யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, பான் ஏசியா வங்கியுடன் கைகோர்த்துள்ளது. இந்தக் கைகோர்ப்பினூடாக, நாட்டில் பாங்கசூரன்ஸ் சேவையை மேலும் விஸ்தரிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. இலங்கையின் நுகர்வோருக்கு தொடர்ச்சியாக புரட்சிகரமான வங்கியியல் வாடிக்கையாளர் தீர்வுகளை பான் ஏசியா வங்கி அறிமுகம் செய்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, சிறந்த காப்புறுதித் தீர்வுகள் வழங்கப்படும் என்பதுடன், இவற்றில் சேமிப்பு, பாதுகாப்பு மற்றும் முதலீடு போன்றவற்றுடன், பரிபூரண நிதித் தீர்வுகள் அடங்கியிருக்கும்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இந்தப் பங்காண்மை மிகவும் முக்கியமானது. இலங்கையில் பாங்கசூரன்ஸ் பிரசன்னத்தை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவியாக அமைந்திருக்கும். பான் ஏசியா வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு புதிய தலைமுறை காப்புறுதி அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்க இந்த பங்காண்மை உதவியாக அமைந்திருக்கும். பான் ஏசியா வங்கியுடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த தந்திரோபாய பங்காண்மையினூடாக பரஸ்பர அனுகூலத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு வழிகோலப்படும் என்பதுடன், நிலைபேறான வியாபார வளர்ச்சியை எய்தக்கூடியதாக இருக்கும்" என்றார்.

ஜுட் கோம்ஸ் மேலும் தெரிவிக்கையில், "பாங்கசூரன்ஸ் என்பது தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வரும் பிரிவு என்பதுடன், ஒப்பற்ற வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதாக அமைந்துள்ளது. சேவைச் சிறப்பு, புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல் தலைமைத்துவம் போன்றவற்றைக் கொண்ட பாங்கசூரன்ஸ் ஊடாக, பாதுகாப்பு இடைவெளியை குறைத்துக் கொள்வதற்கும், இலங்கையர்களின் கனவுகளுக்கு வலுச் சேர்க்கவும் முடியும் என நம்புகின்றேன்" என்றார்.

பான் ஏசியா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நிமல் திலகரட்ன இந்தப் பங்காண்மை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் இந்த முக்கியத்துவம் வாய்ந்த பங்காண்மையில் கைச்சாத்திடுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இதனூடாக வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு நீண்ட கால அடிப்படையிலான பாதுகாப்பையும் வலுவூட்டலையும் எம்மால் வழங்கக்கூடியதாக இருக்கும். இந்த உறுதியற்ற நெருக்கடி நிறைந்த காலப்பகுதியில், பாதுகாப்பான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் முக்கியமானதாகும். இலங்கையர்களுக்கு நிதிச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் 27 வருட கால அனுபவத்தைக் கொண்ட வங்கி எனும் வகையில், எமது புத்தாக்கமான மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய பெறுமதி சேர்ப்பு அம்சங்களை இது மேலும் மேம்படுத்துவதாக அமைந்திருக்கும் என நாம் கருதுகின்றோம்" என்றார்.

இந்தக் கைகோர்ப்பினூடாக பான் ஏசியா வங்கி வாடிக்கையாளர்களுக்கு தமது வங்கியியல் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதுடன், புத்தாக்கமான காப்புறுதி தீர்வுகளை இலகுவாக அணுகிப் பெற்றுக் கொள்ள முடியும். நாட்டில் காணப்படும் வேகமாக வளர்ந்து வரும் வணிக வங்கிகளில் ஒன்றாக அமைந்துள்ள பான் ஏசியா வங்கி, அதன் புத்தாக்கமான வங்கியியல் தீர்வுகள் மற்றும் சேவைகளுக்காக புகழ்பெற்றுள்ளது. வங்கி தொடர்ச்சியாக உறுதியான இலாபப் பெறுமதிகளை பதிவு செய்வதுடன், துறையின் உயர்ந்த ஸ்தானத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. தேசத்தின் உண்மையான இலங்கையின் வங்கியான பான் ஏசியா வங்கி தனது வினைத்திறன் மற்றும் நிலைபேறாண்மைக்காக, தொடர்ச்சியாக பல உள்நாட்டு மற்றும் சர்வதேச விருதுகளையும் கௌரவிப்புகளையும் பெற்றுள்ளது.

மியன்மார்

# 6 மாதங்களுக்கு அவசர நிலை

மியன்மாரில் கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்றத் தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயக கட்சி அமோக வெற்றி பெற்றது.
எனினும் குறித்த தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி ஆட்சியைக் கவிழ்த்த இராணுவம், அங் சான் சூகி போன்ற அரசியல் தலைவர்களைக் கைது செய்தத்துடன் அவர்கள் மீது பல்வேறு வழக்குகளைப் பதிவு செய்தது.

மேலும் அங்கு இராணுவ ஆட்சி அமுல் படுத்தப்பட்டது. இதற்கு எதிராக நடைபெற்ற



போராட்டங்களில் மாத்திரம் இராணுவத்தினர் சுமார் 1500 பேரை சுட்டுக் கொன்றுள்ளனர எனவும், போராட்டக்காரர்கள் மற்றும் பத்திரிகைக்காரர்கள் என சுமார் 8,800 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் பலர் சித்திரவதைக்குள்ளாகினர் எனவும் பலர் மர்மமான முறையில் மாயமாகினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் தேசிய பாதுகாப்பு ஆணையம் முதல் ஆறு மாதத்திற்கு தேசிய அவசர நிலையை நீட்டியிருந்தது.
இந்நிலையில் தற்போது மேலும் ஆறு மாதத்திற்கு அவசர நிலை தொடருமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா




# வங்கியில் பணம் செலுத்த தயங்கும் பொது மக்கள்

சீனாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையினால் அந்நாட்டு வங்கிகளுக்கு 300 மில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் சீனாவில் மக்கள் தாம் சேமிப்புக்களில் இருந்து பணம் எடுக்கவும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் பெரும்பாலான மக்கள் வங்கிகளில் பணத்தினை வைப்புச் செய்யாமல் இருப்பதாகவும், இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பிரேஸிலில்




ரசிகர்களுக்காக

# உயிரை விட்ட ‘பொடி பில்டர்‘

பிரேஸிலின் ரிபேராவ் பிரிட்டோ பகுதியைச் சேர்ந்தவர் பிரபல பாடி பில்டரான (Bodybuilder) ‘வர் வால்டிர் செகாடோ.
55 வயதான இவர் புகழ் பெற்ற பாடி பில்டராகவும் டிக் டொக் நட்சத்திரமாகவும் திகழ்ந்து வந்துள்ளார்.
இந்நிலையில் இவர் தனது உடலை மேலும் அழகாகக் காட்டவும் தனது ரசிகர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும் உயிருக்கு ஆபத்தான மருந்துகளைத் தொடர்ந்து எடுத்து வந்துள்ளார்.
இதனால் உடலில் பாதிப்பு ஏற்படும் என மருத்துவர்கள் எச்சரித்த நிலையில் தனது ரசிகர்களுக்காகத் தொடர்ந்து அந்த குறித்த மருந்துகளை உட்கொண்டு வந்துள்ளார்.
இந்நிலையில் தனது பிறந்தநாள் அன்று வீட்டில் இருந்த அவர் திடீரென மூச்சுத் திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்தார்.
உடனடியாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனென்று பரிதாபமாக உயிரிழந்தார்.
இச்சம்பவமானது அவரது ரசிகர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எகிப்து



# பஸ்-லொறி மோதி கோர விபத்து; 17 பேர் உயிரிழப்பு

வேகக்கட்டுப்பாட்டை இழந்த பஸ்ஸொன்று எதிரே வந்த கனரக வாகனமொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் 17 பேர் உயிரிழந்த சம்பவம் எகிப்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எகிப்தின், சோஹாக் மாகாணம் ஜுஹைனா மாவட்டத்திலேயே கடந்த 2 ஆம் திகதி இக்கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த கோர விபத்தில் 17 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் 4 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த மாதம் 20ஆம் திகதி எகிப்தின் மினாயா மாகாணத்தில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறியின் மீது பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் 23 பேர் பலியானதும், 30-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# சூடு இல்லாமையால் ஊழியர் சுட்டுக்கொலை

உணவை சூடாகப் பரிமாறவில்லை என்ற காரணத்தினால் பிரபல உணவகமொன்றைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் செயல்பட்டு வரும் மெக்டொனால்ட்ஸ் நிறுவன உணவகத்திலேயே கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று மைக்கேல் மோர்கன் என்ற 20 வயதான இளைஞன் தனது தாயாரான லிசா புல்மோரை அழைத்துக்கொண்டு மெக்டொனால்ட்ஸ்க்கு வருகை தந்துள்ளார்.
அங்கு பணிபுரியும் கெவின் ஹோலோமேன் என்ற 23 வயதான இளைஞன் வழங்கிய பிரஞ்சு பிரைஸ் எனப்படும் உணவு சூடாக இல்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டதாகவும், இதன் போது ஏற்பட்ட வாக்குவாதம் தீவிரமடைந்ததையடுத்து குறித்த ஊழியரை மோர்கன் துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் குறித்த ஊழியர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும், மோர்கன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் மோர்கன் இதற்கு முன்பு பலமுறை குற்ற செயல்களில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டவர் என்பது விசாரணையில் தெரியவந்தது.

அமெரிக்கா



# சிலந்தியால் எரிந்த 60 ஏக்கர் காணி

அமெரிக்காவின் உட்டா மாகாணத்தில் உள்ள டிராப்பர் பகுதியைச் சேர்ந்தவர் கோரி மார்ட்டின் ஆலன். 26 வயதான இவர் சமீபத்தில் ஸ்ப்ரிங்க்வில்லி என்ற பகுதிக்குச் சென்றுள்ளார். அங்கு சிலந்தி ஒன்றைப் பார்த்த அவர் அதனைக் கொல்ல நினைத்து அச்சிலந்தி மீது லைட்டர் மூலம் தீ வைக்க முயன்றுள்ளார். எனினும் துரதிருஷ்டவசமாக அருகில் உள்ள இடங்களுக்குத் தீ பரவியுள்ளது.

இதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாத ஆலன் அங்கிருந்து சென்றுள்ள நிலையில் அவர் பற்றவைத்த தீயானது அந்த பகுதி முழுவதும் பரவியுள்ளது.
இதனால், ஸ்பிரிங்வில்லி-யின் சுமார் 60 ஏக்கர் மலைப்பகுதி தீப்பிடித்து எரிந்திருக்கிறது. இதனிடையே உள்ளூர் அதிகாரிகளுக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் ஹெலிகொப்டர் மூலமாக தண்ணீரை வீசி தீயினைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.
இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அப்பகுதி பொலிஸார் ”இப்படி ஒரு சம்பவத்தை தாம் எதிர்கொண்டதில்லை. இச் தற்செயலாக நடந்துள்ளது. எனினும் ஆலனின் பையில் போதைப் பொருட்கள் இருந்த காரணத்தினால் அவர் கைது செய்யப்பட்டு தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்”



பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாயப் போட்டிகள்:

# வெண்கலப் பதக்கம் வென்ற யுபுன் அபேய்க்கோன்

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை இடம்பெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் யுபுன் அபேயக்கோன் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

10.14 செக்கன்களில் போட்டித் தூரத்தை அபேயக்கோன் கடந்திருந்தார். பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளின் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையரொருவர் பதக்கம் பெறுவது இதுவே முதற்தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பந்தயத்தை 10.02 செக்கன்களில் கடந்த கென்யாவின் பேர்டினான்ட் ஒமன்யாலா தங்கப் பதக்கத்தை வென்றதுடன், பந்தயத்தை 10.13 செக்கன்களில் கடந்த தென்னாபிரிக்காவின் அகனி சிம்பைன் வெள்ளிப் பதக்கத்தை வென்றிருந்தார்.

அந்தவகையில், நேற்று மாலை 4.24 மணி வரையில் 47 தங்கப் பதக்கங்கள், 38 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 124 பதக்கங்களுடன் தொடர்ந்தும் பதக்கப் பட்டியலில் அவுஸ்திரேலியா முதலாமிடத்தில் காணப்படுகின்றது.

39 தங்கப் பதக்கங்கள், 38 வெள்ளிப் பதக்கங்கள், 29 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 106 பதக்கங்களுடன் போட்டியை நடாத்தும் நாடான இங்கிலாந்து இரண்டாமிடத்தில் காணப்படுகின்றது. 16 தங்கப் பதக்கங்கள், 20 வெள்ளிப் பதக்கங்கள், 21 வெண்கலப் பதக்களென மொத்தமாக 57 பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் கனடா காணப்படுகின்றது.




பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாயப் போட்டிகள்:

# இலங்கைக்கு முதலாவது வெள்ளிப் பதக்கம்


இங்கிலாந்தில் நடைபெற்ற பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை ஆண்களுக்கான எஃப்42-44/61-64 தட்டெறிதல் பரா போட்டியில் இலங்கையின் பாலித ஹல்கஹவெல கெதர வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

44.20 மீற்றர் தூரத்தை பாலித ஹல்கஹவெல கெதர எறிருந்திருந்தார்.

# பரிஸ் ஸா ஜெர்மைன் செல்லும் பெர்ணார்டோ சில்வா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான பெர்ணார்டோ சில்வாவை ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா கைச்சாத்திட முயல்வதை பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் சவாலுக்குட்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

27 வயதான சில்வாவுக்காக 85 மில்லியன் யூரோக்களை சிற்றி எதிர்பார்க்கையில், பார்சிலோனா கைச்சாத்திடுவதற்கான விண்ணபத்தை வைக்க முன்னர் தமது வீரர்களை விற்க வேண்டியுள்ளது.






கண்காட்சிப் போட்டியில்

# சாய்ந்தமருது நியூ ஸ்டாரை வென்ற ஈஸ்டர்ன் பைட்டர்ஸ்

நூருல் ஹுதா உமர்சா

ய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழகத்தின் புதிய சீருடை அறிமுக நிகழ்வும், சாய்ந்தமருது நியூ ஸ்டார் விளையாட்டு கழகத்தினுடனான நட்புரீதியிலான 20 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட கண்காட்சி கிரிக்கெட் போட்டியும் சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலையில் நடைபெற்றது.

இக்கண்காட்சி போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழகத் தலைவர் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களை ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் பெற்றது. பதிலுக்கு 171 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் 16 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 86 ஓட்டங்களையே பெற்று 84 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழகத்தின் வீரர் சபீர் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 05 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.